தென்றல்

ஆசிரியர் கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6.

மலர் 4 | சென்னை | 7-12-57 | சனிக்கிழமை | இதழ் 23

அந்த முப்பது லட்சம்?

..ரியத்தைச் சாதித்தாலும், சாதிக்காவிட்டாலும், மக்களை ..ப வைப்பதில் காமராஜ் பேர் ..னவர். பணக்காரர்கள் தான் ..னக்குத் தேவை என்று பேசு..ர். இன்னொரு நாளைக்கு ..ழைகளோடு ஏழையாக நின்று ..ன் உழைப்புப் பாரீர்' என் ..பார். அவரது அரசியல் செல்வாக்கு காலத்தில் இப்படிப் பல ..ழப்பங்களை ஏற்படுத்தியிருக்கிருர்.

சென்ற கிழமை நெய்வேலிக்குச் சென்றிருந்த அவர் தொழிலாளர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிருர். 'கலெக்..ர்மூலம் குறைகள் தீர்க்கப்படவில்லையானல் எனக்குக் கடிதம் எழுதுங்கள். நான் வந்து தீர்த்துவிடுகிறேன். பிறர்சொல்வதைக் கேட்டுக் கிளர்ச்சி செய்யாதீர்கள்' என்று கூறியிருக்கிருர். முறைப்படி அமைந்திருக்கும் தமிழ்நாட்டு அரசியல் கட்சிகள், கிளர்ச்சியைக் கடைசி ஆயுதமாகத்தான் வைத்திருக்கின்றன என்பது காமராஜர் அறியாததல்ல. அவரது காலத்தில் நடைபெற்று முடிந்திருக்கும் கிளர்ச்சிகளெல்லாம், சர்க்காருக்குப் பல வேண்டுகோள் விடுத்த பிறகு துவங்கப்பெற்றதாகும். இதையெல்லாம் உணர்ந்திருந்தும், தெரிந்திருந்தும், அனுபவப்பட்டிருந்தும் காமராசர் அவ்வாறு குறிப்பிட்டிருப்பது சர்க்கரையாகப் பேசி ஏமாற்ற நினைத்திருப்பதுபோல் தான் செய்தியைப் படிப்பவர்களுக்குப் படுகிறது. நெய்வேலிக்குச் சென்று தொழிலாளர்கள் பால் பாசம் காட்டிப் பேசிய அவருக்கு கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத் திட்டத்தில் நடந்ததும், தொழிலாளர்கள் பட்ட துயர்களும் தெரியாமற்போன மர்மம் புரியவில்லை. அதன் விபரத்தைக் காவனூர் தோழர் இரா. நாராயணசாமி என்பவர் வடித்துத் தந்திருக்கிருர். இதற்குக் காமராசர் என்ன சொல்கிருர்?

"10-11-57 அன்று காலை முதலமைச்சர் திரு. காமராசர் அவர்கள் கிருட்ணகிரி நீர்த்தேக்க அணையைத் திறந்துவிட்டார்கள். கோலாகலமான வரவேற்பு, விழா, வைபவம்—எல்லாம் சிறப்பாகத்தான் நடைபெற்றது. வரவேற்பு வளைவுகள், மாவிலைத் தோரணங்கள், விதவிதமான வரவேற்புகள், விருந்துகள் எல்லாம் தாராளமாக இடம் பெற்றிருந்தன. 4000 ரூபாய் அல்லவா? குறைவேற்படுமா? முதலமைச்சர் அணை கட்டும் வேலையில் பங்கு கொண்ட தொழிலாளி, முதலாளி, அதிகாரிகள் யாவரையும் பாராட்டினர். அதோடு இன்னொரு செய்தியையும் கொடுத்தார்.

'நமது இஞ்சினியர்கள் மிகவும் திறமைசாலிகளாகவும் ஊக்கம் மிகுந்தவர்களாகவும் ஆகிவிட்டார்கள். அவர்கள் சிக்கனத்தைக் கற்றுக்கொண்டுவிட்டார்கள். பவானி சாகரம் திட்டத்தின்போது 7 கோடி ரூபாயில் துவங்கி 13 கோடி ரூபாயில் முடித்தார்கள். ஆனல் இந்த கிருட்ணகிரி திட்டத்தில் போட்ட முதலீடு 1 கோடி 82 இலட்சம் ரூபாய். செலவழிந்தது 1 கோடி 50 இலட்சம் ரூபாய்தான். அதன்படி 32 இலட்சம் ரூபாய் மிச்சப்படுத்தியிருக்கிருர்கள். அந்த அளவிற்கு நம் இஞ்சினியர்கள் சிக்கனமும் திறமையும் படைத்தவர்களாகிவிட்டார்கள்."

இன்னும் எவ்வளவோ பாராட்டுரைகள்-புகழுரைகள். இந்தப் புகழுரையில் இஞ்சினியர்கள் ஒரு சுற்றுப் பருத்துவிட்டார்கள் என்ருலும் வியப்பில்லை. ஆனல் அதே நேரத்தில் வேதனையுடன் பாட்டாளிகள் முணு முணுப்பதும் கேட்காமலில்லை. 'எங்கள் வயிற்றிலே மண்ணடித்துவிட்டு மிச்சப்படுத்தியதுதானே இந்த 32 இலட்சம்' என்று அவர்களின் வற்றிய வயிறும், உலர்ந்த உடலும், பஞ்சடைந்த கண்களும் நமக்கு இவ்வுண்மையைத் தானே உணர்த்துகிறது!

ஆம்! அந்த உண்மையை அவர்களென்ன-அந்த அணையும் கால்வாயும், பாறைகளும் பேச சக்திமட்டும் பெற்றிருந்தால் தன்னுடன் பாடுபட்ட அந்தப் பஞ்சைகளைப்பற்றி கண்ணீர் வடித்துக் கூறும்.

1955ம் ஆண்டு சனவரித் திங்கள் முதலமைச்சர் திரு. காமராசர் அவர்கள் கால்கோள் விழாவின்போது 'இதுபோன்ற சிறு சிறு அணைத் திட்டங்களெல்லாம் நீர்ப்பாசனத்திற்குத் தானென்ருலும் ஒரு வகையில் வேலையில்லாப் பிரச்சனையையும் தீர்க்க உதவுகிறது' என்ருர். அது என்னவோ உண்மைதானென்ருலும் தொழிலாளர்கள் உண்மையிலேயே இந்த மூன்ருண்டுகளில் மகிழ்ச்சியுடன் வாழ்ந்த நாட்களே கிடையாது எனலாம். முதலாவதாகக் கூலிப் பிரச்சனை.

ஆண்களுக்கு ஒரு ரூபாய் இரண்டணவும், பெண்களுக்கு பத்து அணவும் கூலியாகக் கொடுக்கப்பட்டது. கல்லுடைப்போர்களுக்கும், கொத்து வேலை, தச்சு வேலை செய்பவர்களுக்கும் சராசரி இரண்டே நாள் ரூபாய்

—4-ம் பக்கம்—

வாழ்க்கையின் வெற்றிக்கு உடலமைப்பும் மிக முக்கியம் என்பதை அறிந்த ஒரு மனோதத்துவ அறிஞர், பெருத்த உடல்களைக் குறைப்பதற்குச் சக்தி பெற்ற மருந்தொன்றைக் கண்டுபிடித்திருக்கிறார். பார்க்கச் சகிக்காத ஆடவரும் பெண்டிரும் வாளிப்பும் வனப்பும் பெற இந்த மருந்து பெரிதும் பயன்படும் என்பதைச் சான்றுகளோடு இங்கே விளக்கிக் காட்டியிருக்கிறார். ஆத்மிகத் துறையில் சிக்கி அல்லலுறும் இந்த நாட்டுக்கு அத்தகைய மருந்துகள் அவசியமில்லையா ? படியுங்கள்... !

(ஆ-ர்.)

உஷ்! இவர்களுக்கு மட்டும்!

நீங்கள் பலூன் மாதிரி ஊதிக்கொண்டே போகிறீர்களா? கட்டுக்கடங்காமல் தொந்தி சரிந்து விழுகிறதா? என்ன செய்தாலும் சதையைக்குறைக்க முடியவில்லையா? யாரையா அது 'புள் டிக்கட்' கொஞ்சம்தள்ளி நில்...காற்று வரமாட்டேங்குது! 'ஏன் சார் நீங்களெல்லாம் பஸ்ஸிலே ஏறீங்க; சொந்தக் கார் வச்சுக்கப்படாது?' 'ஓய்! சைக்கிள்! 'டியூப்' வெடித்துவிடப் போகிறது! இறங்கி தள்ளிக்கிட்டு போமய்யா...' 'என்னடி! கோமளம்! எந்தக் கடையிலே அரிசி வாங்கிறே? நமக்கும் கொஞ்சம் சிடார்சு பண்ணேன்...' என்றுஇன்னோரன்ன விதமாக உங்கள் நண்பர்களோ, தெருவோரத்து வால்களோ கிண்டல் செய்கிறார்களா?... கவலைப்படாதீர்கள்! உங்களுக்குத்தான் இந்தக் கட்டுரை! ஆதலால் தயவுசெய்து உருண்டு திரண்ட ஒழுங்கான உடற்கட்டுள்ளவரோ ஒல்லி நாடித் தேகக்காரரோ இதைப் படிக்க வேண்டிய அவசியமில்லை அவசியமில்லை என்றால் சேட்டை செய்கிறீர்கள்...மேலே படிக்கத்தானே செய்கிறீர்கள் சரி, சரி, படியுங்கள் ..இதைப் படிக்க சந்தர்ப்பம் கிடைக்காதவர்களுக்காவது சொல்லுவீர்களல்லவா?

சரீர வளர்ச்சியிலே, சதை வளர்ச்சி அதிகப் பங்கு பெறுவதைப்பற்றி சோகப்பட்டு எத்தனையோ முறைகளைக் கையாண்டிருக்கின்றனர். உணவைப் பொறுத்ததல்ல உடல் ஊத்தம்! ..சிலருக்கு கவலை துளியும் விழாத மன நிறைவு...சிலருக்கு வம்ச வழியாக வரும் ஒருவித வியாதி...சிலருக்கு காரைவிட்டு இறங்கி இரண்டடி எடுத்துக்கூட வைக்கமுடியாத அளவுக்கு பண வீக்கம்...இன்னும் சிலருக்கு நீர் வீக்கம் உடம்பிலே! தினம் சிறிது தூரம் ஓடுவது, ஆசனம் முதலிய தேகாப்பியாசங்கள் செய்வது, சத்துப் பொருட்களான, பால், முட்டை, வெண்ணெய் முதலியவைகளை நீக்குவது, வைத்தியரிடமிருந்து எத்தனையோ வகை மருந்துகளையும் ஊசிகளையும் அனுபவிப்பது— இதுபோன்ற வழிகளில் வந்து சேர்ந்துள்ளவைதான் மூன்று— **மயக்க முறை, மருந்துப்பொடி, மாத்திரை.**

இவைகளில் மிகவும் ஆச்சரியத்தையும் ஆவலையும் தூண்டும் முறை-செயற்கைத் தூக்கம்,தன் வயப்படுத்தி மயக்குதல் என்று கூறப்படும் 'ஹிப்னோசிஸ்' முறையே. **நார்மன் வி. லீ** என்னும் லண்டன் மன நூலாசிரியர் இரண்டாண்டு காலத்தில் இந்த முறையில் இருநூறு பெண்களின் உருவத்தை மாற்றியிருக்கிறாராம்!

மிஸ்டர் லீயின் முறை மிகவும் எளிதானது. எந்தவித உணவுப் பத்தியமும் தேவையில்லை. 'ஹிப்னோசிஸ்' மூலமாக உடல் வளர்ச்சிக்குண்டான சுரப்பைகளை இயக்கிவரும் உணர்ச்சி உறுப்புக்களை தன் வயப்படுத்தி, எந்தவிடத்தில் சதையை அதிகமாக்க வேண்டும் அல்லது குறைக்க வேண்டும் என்று மெதுவாக அவைகளிடம் பேசுகிறார்! எந்த ஒரு நபருக்கு இவ்விதம் 'வைத்தியம்' செய்ய வேண்டுமோ அவர் லீயுடன் முழு மனதோடு ஒத்துழைப்பாராயின் எந்தப் பெண்ணையும் அவரவர் விருப்பப்படி ஆக்கித்தர தன்னால் முடியும் என்று சவால் விடுகிறார்! ஆஹா! ஒரு முறை மாத்திரம் அவர் நம் நாட்டில் சுற்றுப் பயணம் செய்வாரேயானால் எத்தனை பெண்மணிகள் அவரைச் சூழ்ந்துகொள்வர் தெரியுமா, ரகசியமாக!

லீயின் முறை வெற்றிகரமாக நடக்க வேண்டுமானால் இரண்டு விதிகளை அவசியம் கடைபிடிக்க வேண்டும். ஒவ்வொரு 'நோயாளி'யும் ஒவ்வொரு இரவும் படுக்கைக்குப் போகுமுன் தான் எவ்விதம் உருமாற வேண்டும் என்பதை ஒருசில நிமிடங்கள் தியானத்தில் நிறுத்தி, திடமான மன நம்பிக்கையோடும், உள்ளத்தை அடக்கும் சக்தியோடும் வைத்தியருடன் பூரணமாக ஒத்துழைக்க வேண்டும். இரண்டாவது, உணவுப் பத்தியத்தைக் கடைபிடிப்பதையும், சதைப் பாகம் மிகுந்திருக்கும் பகுதிகளை 'டேப்', 'அட்டை' இவைகள் மூலம் கட்டுப்படுத்தி வைக்கும் முட்டாள்தனமான முறையையும் கண்டிப்பாகவிட்டு விடவேண்டும்.

முதன் முறையாக சொந்தத் திலேயே தன் முறையை பயிற்சி செய்து பார்க்கும்பொழுது பத்தே நாளில் தன் மனைவியின் எடையிலிருந்து எட்டு ராத்தலைக் குறைத்துவிட்டார்! ஒரு மாத காலத்தில் ஒரு பெண்மணி தன் மார்பகத்தில் ஓர்அங்குல உயரத்திற்கு சதை போட்டுவிட்டாள்!

இரண்டாவது முறைதான் மருந்துப்பொடி. ஸ்வீடனின் ஆயிரக்கணக்கான 'பீப்பாய் இடைகள்' உடுக்கைகளாகியிருக்கின்றன, **'மைனஸ்'** என்ற இந்த மருந்தை உபயோகித்து! **உடம்பிலிருக்கும்** அதிக சதை பாகத்தைக் கரைத்து, கழித்துத் தள்ளுவதால்தான் இதற்கு 'மைனஸ்'என்று பெயரளிக்கப் பட்டிருக்கிறது போலும்.

பசி வயிற்றைக் கிள்ளும் பொழுது படைக்கப்பட்ட உணவுக்குமுன் உட்காருவதற்குப் பதிலாக, சிறிதளவு இம்மருந்தை உட்கொள்ள வேண்டியதுதான். உடைசித்தளி தொண்டையை விட்டு இறங்கிய சில விநாடிகளில், ஏதோ வடை பாயசத்தோடு கல்யாணச் சாப்பாட்டை முடித்து விட்டது போன்ற திருப்தி ஏற்படும்!

"ஆஹா! அப்படியா? எங்கே அந்த மருந்து? நம் அரசாங்கம் பணத்தைப் பல வழிகளில் பாழடித்துவிட்டு, உணவுப் பற்றாக்குறையைப் பெருக்கிவிட்டு, 'திட்டம்! திட்டம்! வாயையும் வயிற்றையும் ஈரத் துணியால் மூடிக்கொள்ளுங்கள்' என்று கூறுவதை, திட்டக்காலம் முடியும்வரை இந்த மருந்தை தருவித்துக் கொடுப்பார்களேயானால், திட்டத்தின் வெற்றிக்குப் பிறகு தடையே கிடையாதே" என்று ஏளனக்குரல் விடுக்கத் தோன்றுகிறதல்லவா?

இந்த மருந்தை, டாக்டர் **கல்லிஸ்வென்னிங்கும் ஹோல்ஜர் நைஸ்டிராமும்** கண்டுபிடித்து, பதினெட்டு மாதங்களுக்கு ஸ்டாக்ஹோமில் உள்ள மருத்துவ நிலையத்திலுள்ளவர்களுக்கு கொடுத்து அதன் வெற்றியை நிர்ணயித்த பிறகே ஸ்வீடன் மருத்துவக்குழு, பகிரங்கமாக இதை விற்பனை செய்ய அனுமதியளித்தது.

ஒரு கரண்டித்தூளை ஒரு குவளைத் தண்ணீரில் கரைத்தவுடன் ஒருவித நுரை தள்ளிய, எலுமிச்சை மணம் வீசும் திரவம் உண்டாகிறது. இது வயிற்றுப் பையை அடைந்தவுடன் ஒருவித மழ வழப்பான பொருளாக மாறி (ஜெல்லி) வயிற்றை அடைத்துக் கொண்டு, சாப்பிட்டு முடித்து விட்டது போன்ற ஒரு உணர்ச்சியைத் தருகிறது. இந்த 'ஜெல்லி' ஒரு சாதாரண உணவு எவ்வளவு நேரம் வயிற்றில் தங்கி ஜீரணமாகுமோ அந்த அளவு வயிற்றிலே குடியிருந்து சிறிது நேரத்தில் மீண்டும் பசியெடுக்கா வண்ணம் செய்கிறது. இந்த 'மைனஸ்' மருந்தின் முழுப் பயனை அடையவேண்டுமானால் சர்க்கரை, ரொட்டி, தானியங்கள், உருளைக்கிழங்கு, கொழுப்பு பதார்த்தங்கள் முதலியவற்றை நீக்குவது நலம். ஆனால் மீனோ மாமிசமோ, மற்ற காய்கனி வகைகளோ தடை கிடையாது. ஆனால் இதை உட்கொள்கிறவர்கள் நோய் நொடியின்றி ஆரோக்கிய உடம்புள்ளவர்களாக இருப்பது அவசியம்.

'மைனஸ்' முதன் முதலில் ஸ்வீடன் கடைகளுக்கு வந்தவுடன் அதற்கு ஏற்பட்ட 'கிராக்கி'! தயாரிப்பாளர்களால் கடைகளை மொய்க்கும் பொது மக்களுக்கு பதில் சொல்ல முடியவில்லை. அங்கேயே அப்படியென்றால் இங்கு சொல்லவா வேண்டும்;ஒரு பெரிய 'பிசினஸ்' பண்ணலாமே 'பிளாக்கிலே'!

மூன்றாவது முறைதான்—பிரிட்டனிலும், அமெரிக்காவிலும் பெயர்பெற்ற முறை — மாத்திரை மூலம். இந்த மாத்திரைக்குப் பெயர் என்ன தெரியுமா?பயந்து விடாதீர்கள்- **பீனோல், மிகதல், டெட்ரா, ஹைட்ரோ, ஆக்சின், ஹைட்ரோ குளோரைட்'** என்பதாகும்! **டாக்டர் எம்.** ரோஸ் **டால்ஸ்கி** தலைமையில் இந்த மாத்திரையைத் தயாரித்த ஜெர்மனிய மருத்துவக் குழுவுக்கு முன் கூறப்பட்ட தூள் மருந்தின் சிக்கனமானப் பெயரில் நம்பிக்கை இல்லைபோலும்; அதனால் தான் அந்த மாத்திரையைச் சாப்பிடும் நேரத்தைவிட அதன் பெயரைக் கூற ஏற்படும்

★ அ. ராஜா. எம். ஏ., எம். எஸ்சி. ★

— 8-ம் பக்கம் —

சிவாஜி - நேரு

சென்ற வாரம் மராட்டிய மண்டலம் கடந்துபோன அதனுடைய பொற்காலத்தை எண்ணி மகிழ்ந்தது. கீர்த்தி பெற்ற வீரப் பாசுரங்களைப் பாடி, ஆர்த்தெழுந்து கோர்த்தி மிகுந்த மராட்டிய மண்டலத்தை நிர்மாணித்த தங்கள் தலைவனை-சரித்திரத்தில் மராட்டியத்திற்கென பல ஏடுகளைப் பிடித்துக் கொண்ட குலவிளக்கை-சத்ரபதி சிவாஜியை எண்ணிப் பூரித்தார்கள். நானூறு ஆண்டுகளுக்கு முந்திய மராட்டியத்தின் காட்சி அவர்கள் மனதில் படம் விரித்தாடியது. உரத்திலும் திறத்திலும், உருவத்தின் தோற்றத்திலும் தனக்கென ஒரு புது வழியை வகுத்துக்கொண்ட மகாராஷ்டிர ஜீவனை - ஜோதிப் புருஷனை-மானசீக தெய்வமாகக் கருதி கண்களைமூடி வீரவணக்கம் செலுத்தினார்கள்.

அப்சல்கான் வீழ்ச்சி!
புலிநகத்தின் புகழ்!
விரல் இழந்தான் செயிஸ்டகான்!
சூரத் முற்றுகை!
பட்டாபிஷேகத்தில் எடைக்கு எடை தங்கம் தந்தது!

—என்று கொட்டை எழுத்துக்களில் சரித்திரப் புத்தகத்தில் மகுடமிட்டுவரும் தாய் நிலத்துப் பெருமையை நினைத்து நினைத்து மண்டலம் பூரித்தது. பிரதாப்கரில் எழுப்பப்பட்டிருக்கும் கம்பீர சத்ரபதியின் சிலைக்கு மரியாதை காட்டியது மகராஷ்டிர சமுதாயம். பண்டிதநேரு, ஐநூறு படிக்கட்டுகளைத் தாண்டிப்போய் அகிலமெல்லாம் புகழ்ந்து பாராட்டிய அந்த மராட்டிய மாவீரனின் சிலையைத் திறந்துவைத்திருக்கிறார். 'கலகக்காரன், முரடன்,' என்று மொகலாயச் சக்கரவர்த்திகளால் வர்ணிக்கப்பட்டாலும், சுல்தான்களால் இகல்வாகப் பேசப்பட்டாலும், மராட்டியர்களுக்குள் எழுந்த ஒற்றுமைதான் சிவாஜியைக் குன்றின் மேல் தூக்கிவைத்தது என்பது உண்மைதான். ஆனால் அந்த ஒற்றுமையைக் கட்டிக்காத்தவன் சிவாஜிதான் என்பதைச் சரித்திர ஆசிரியர்கள் மறுப்பதற்கில்லை. எந்த சிவாஜி, அவனது வாழ்நாளில் மராட்டியர்கள் மத்தியில் அசைக்கமுடியாத கூட்டு பலத்தை உருவாக்கினனோ, அதே சிவாஜி செத்த பின்னும் மராட்டியர்கள் மத்தியில் கடந்த வாரம் ஒற்றுமையை நிலைநாட்டியிருக்கிறன் என்பதை நினைக்கும்போது மனம் குளிர்கிறது.

கடந்த சிலதிங்கள்களுக்குமுன் பம்பாய்ப் பட்டணத்தில் கொழுந்து விட்டெரிந்த போராட்டத்தீயை இன்றைய தினம் நினைவுப்படுத்திப் பார்த்தாலும் நெஞ்சம் திகிலடையத்தான் செய்கிறது. நாளைக்கொரு மந்திரி சபையும், நேரத்திற்கொரு தர்பாரும் நடைபெறும் எதேச்சாதிகார நாட்டிலேகூட நடைபெருத அளவுக்குத் தாக்குதல்களும், எதிர்த் தாக்குதல்கள் பம்பாயில் நடைபெற்றன. நேருவின் காலத்திற்குப் பிறகு நீண்ட நெடுநாட்கள் வரை அவர் தெய்வமாகவே கருதப்படுவார் என்று எண்ணிக் கிடந்தவர்கள் எல்லாம் பெருமூச்செறியும்வகையில் நேருவின் படம் அங்கே படாத பாடுபட்டது. நாடு மறக்கவில்லை; நேருவும் மறந்திருக்க நியாயமில்லை. அவ்வாறு பழுத்துப் போயிருந்த மாநிலத்தில்-மக்கள் மத்தியில் பண்டித நேரு வரும்போது எந்தவிதக் குழப்பமும் தகராறுகளும் நடைபெறவில்லை என்றல் சிவாஜி வளர்த்த ஒற்றுமையும், சிவாஜியின்பால் அவர்கள் வைத்திருக்கும் அன்புமே யாகும்.

பதினையாயிரத்திற்கு மேற்பட்டவர்கள் அணிவகுத்து நின்று நேருவுக்குத் தங்கள் அதிருப்திக் குரலைத் தெரிவித்திருக்கிறர்கள். ஒருவரல்ல; இருவரல்லர்! பதினையாயிரம் பேர்! நேருவின் வரவேற்பில் கலந்துகொண்ட மொத்த எண்ணிக்கையில் ஐந்தில் ஒருபங்குப் பேர் நேருவிடம் தங்கள் அதிருப்தியைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறர்கள். அந்த கலவரத்தை எண்ணி பண்டிதருக்குப் பலத்த போலீஸ் பந்தோபஸ்துப் போடப்பட்டிருந்தது. ஆனல் எதிர்ப்புத் தெரிவித்தவர்கள் நேருவின் பாதையில்தான் 'கோஷத்'தை எழுப்பினர்களே தவிர சிவாஜியின் சிலை நிர்மாணிக்கப்பட்டிருந்த பகுதியில்அல்ல. பண்டித நேரு அந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ளப் போகும் முன்னரே எதிர்ப்புக்காரர்கள் கலைந்துவிட்டார்கள். 'எங்கள் பணி முடிந்தது' என்றும் தெரிவித்துவிட்டார்கள். காரணம் பண்டிதர் திறக்கப் போவது சிவாஜியின் சிலையை! மராட்டியன் என்றல் மற்ற மொழிக்காரர்கள் பெருமையாக நினைக்கும்படி செய்தானே அந்தச் சரித்திரக் காவலன் சிலையை! அரசியல் யூகம் தெரிந்தோர் முடிவுகட்டிக்கொள்ளட்டும்! சிவாஜி அங்கே நேருவைக் காப்பாற்றினன். சிலை உருவம் சிவாஜியாக இல்லாதிருந்தால்...! நேருஜியின் கதி? மராட்டியத்தின் வரலாற்றினைக் கற்றவர்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டிய பிரச்சினை!

யாரையும் புகழாத நேரு, எந்த உள்நாட்டுக்காரனையும் பாராட்ட மனமில்லாத நேரு சிவாஜியைப் புகழ்ந்தார், பாராட்டினர். தவப்புதல்வன் என்றர். உலகத்திலே ஆச்சரியப்படத்தக்க சம்பவம் இது! சிவாஜியைப் பற்றிய உண்மையை ஒப்புக்கொண்டுவிட்டார். ஒரு வேளை, பம்பாயை இனிப்பார்க்க முடியாது என்று ஏங்கிக் கவலை கொண்டிருந்த அவருக்கு மறுபடியும் மராட்டியர்கள் மத்தியில் அமைதியாகப் பேச ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்தான் சிவாஜி என்பதால் தானே?

தென்னரசு

பண்டிதநேரு அன்றைய சொற்பொழிவில் 'இந்த பம்பாய் விஜயத்தை நான் ஒருபோதும் மறக்க முடியாது' என்று வலியுறுத்திக் கூறியிருக்கிறர். உண்மைதான். 'சிவாஜி மகராஜ் வாழ்க! நேருஜி வாழ்க' என்று மராட்டியம் கூவும் எனப் பண்டிதர் எதிர்பார்த்திருக்கமாட்டார். அந்தப் பெருமையையும் சிவாஜிதான் நேருவுக்குக் கொடுத்தான். அதனல்தான் உண்மையான சிவாஜியை நேரு படம் பிடித்துக் காட்டினரோ? இதுவும் எளிதிலே முடிவுகட்டிவிடக் கூடிய சிக்கலல்ல!

நேரு சிவாஜியைப் புகழ்ந்தார்-அதோடு மட்டுமல்ல! பெரும் புகழும் பெற்ற சிவாஜி, அப்சல்கானை மறைமுகமாகத் தாக்கினன் என்பது வெள்ளைக்காரர்கள் தவறுதலாக எழுதியது; நான், ஆரம்பகாலத்தில் சிவாஜி அப்சல்கானை மறைமுகமாகக் கொன்றது உண்மைதான் என்று எண்ணிக்கொண்டிருந்தேன். பிறகு உள்நாட்டு ஆசிரியர்கள் எழுதிய சரித்திரங்களைப் படிக்கும் வாய்ப்புக் கிடைத்தது, அவைகளைப் படித்த பிறகு என்னுடைய முந்திய முடிவை மாற்றிக் கொண்டேன்-என்பதாக அவர் சிலைத்திறப்பு விழா அன்று பேசியிருக்கிறர். உண்மைதான்! ஔரங்கசீப்பே புகழும் அளவுக்குப் பெருந்தன்மையும், அஞ்சா நெஞ்சமும் கொண்டு விளங்கிய சிவாஜி, அப்சல்கானை சதி செய்து கொன்றிருப்பான் என்பது நம்பத்தகாததுதான். இதை முதன் முதல் தெரிவித்திருக்கிறர் பண்டிதர். வரவேற்கத்தக்கது. பண்டிதநேரு உட்பட, எதிர்காலச்சரித்திரத்தில் கதாநாயகர்களாக திகழவேண்டியவர்கள், சிவாஜி, சரித்திரத்தில் பாதிக்கப்பட்ட நிலைமையை எண்ணிப்பார்த்து, சரித்திரத்தை மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும். அதுவும் பண்டிதநேரு மிக எச்சரிக்கையோடு நடந்துகொள்ள வேண்டியவர்.

வெளி நாட்டுச் சரித்திராசிரியர்கள் சிவாஜியைக் குறைத்து மதிப்பிட்டுவிட்டார்கள். அதே வெளி நாட்டார் இனி வரும் இந்தியச் சரித்திரத்தை எழுத நேர்ந்தால் நேருவைப்பற்றி என்ன எழுதப்போகிறர்கள்?

டிட்டோவின் சொந்தக்காரர்கள் எழுதினல் மனிதருள் மாணிக்கம்-என்று எழுதுவார்கள். அமெரிக்க நாட்டுச் சரித்திராசிரியர்கள் வரைந்தால் 'நேரு மிக அழகானவர், ஆசியாக் கண்டத்து ஐரோப்பிய அதிகாரி' என்றுதான் நிச்சயமாகக் குறிப்பிடுவார்கள்.

ஆனல் உண்மையான சரித்திர ஆசிரியன் ஒருவன் இன்று நேருவைப் பற்றிக் குறிப்பிட்டால் 'நேரு உலகத்தில் புகழை சம்பாதித்துக்கொண்ட பெரும் தலைவர்களில் ஒருவர்; ஆனால் அவர் பிறந்த துணைக்கண்டத்தின், தென் பகுதியை ...

— [illegible] —

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்: அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 4 | 7—12—57 | இதழ் 23

"என்னிடம் அதிகாரம் இருந்தால்...!"

மாநில அரசாங்கங்களின் அதிகாரங்கள் அனைத்தும் டில்லியில் குவிந்துகிடக்கின்றன என்று சொன்னபோது சீறி விழுந்தவர்கள் எத்தனை பேர்?

மாநில அரசாங்கம் வெறும் நகராட்சி மன்றங்களைப்போல் மட்டுமே இயக்குவிக்கப்படுகின்றது என்று எடுத்துரைத்தபோது, 'இவர்களுக்கு வேறு என்ன வேலை' என்று அலட்சியப்படுத்திய பெரியவர்கள் எத்தனை பேர்?

டில்லிக்கு, சென்னை ஏவலாளா?-என்று காங்கிரஸ்காரர்களில் முக்கியமானவர்கள் இடித்துக்காட்டியபோது யார் யார் எல்லாம் வருத்தப்பட்டார்கள்?

—அவர்களெல்லாம், தென்னாட்டுப் பிரச்சினையை திராவிட முன்னேற்றக் கழகம் கூறுகிறதே என்பதற்காக இவ்வளவு காலம் பேசாதிருந்தார்கள் போலும்!

கைத்தறியாளர்களைப் பொறுத்தவரை, தமிழ்நாட்டில் முதன் முதல் ஆதரவுக்குரலை எழுப்பியது தி. மு. கழகம்தான் என்பதைக் கைத்தறியாளர்களே அறிவார்கள். பல இடங்களில் சர்க்கார் கைத்தறியாளர்கள் பால் காட்டும் 'ஓரவஞ்சனை'யை அறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள்.

அடித்தளத்திலே கிடந்து அவதியுறும் கைத்தறியாளர்களுக்கு சர்க்கார் பல வகைகளில் உதவிபுரிய வேண்டும் என்று நாம் பன்முறை கூறி வந்திருக்கிறோம். அதற்கும் சென்னை சர்க்கார் எதுவும் பதில் பேசாதிருந்தார்கள். 'எல்லாம் மத்திய சர்க்கார் பார்த்துக் கொள்ளும்' என்று பெரியவர்கள் கூறினார்கள்.

டெல்லி சர்க்கார் என்ன செய்தது? கைத்தறியாளர்கள் தென்னாட்டில் தானே என்று அலட்சியமாக இருந்தார்கள் அவர்கள். கண் துடைப்பிற்காக சிறு உதவி செய்தார்கள். இப்போது அந்த உதவியும் மறுக்கப்பட்டுவிட்டது.

சென்னை மந்திரியே மெய் வருந்தும் அளவுக்கு கைத்தறியாளர் பிரச்சினையில் டில்லி சர்க்கார் நடந்துகொண்டுவிட்டது. 'என்னிடம் அதிகாரம் இருந்தால் தள்ளுபடிப் பணத்தைக் குறைத்திருக்கமாட்டேன்' என்று மந்திரி வெங்கட்ராமன் சேலத்தில் கைத்தறி நெசவாளர் சங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறார். இப்போதாவது அவர்களுக்குப் புரிந்தது பற்றி நமக்கு மகிழ்ச்சிதான்.

டில்லியில் அதிகாரம் குவிந்திருக்கிறது என்பதை உணர்ந்தால்—சென்னை மக்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்பதைப் புரிந்துகொண்டால் - அதுவே நமக்குப் பெரிய வெற்றிதான். எத்தனை காலத்திற்கு இந்தப் பதவி? அதற்குப் பிறகாவது தமிழ் நாட்டு மக்களின் குரலோடு இணைந்து குரல் எழுப்பமாட்டார்களா?

என்ன செய்வது! மனச்சாட்சி இருக்கிறது அவர்களுக்கெல்லாம்! இருந்தும் 'எனக்கு அதிகாரம் இருந்தால்!'...என்று பேசுகிறார்கள். காலம் யாரை விட்டது?

— 1ம் பக்கத் தொடர்ச்சி —

கொடுக்கப்பட்டது. அதுவும் உரிய காலத்தில் கிடைப்பது அரிது. கண்டிராக்டர்களைப்பற்றி கூற வேண்டாம். குறிப்பிட்ட வேலை முடிந்து ஆறு மாதங்களான பிறகும்கூட அவர்களுக்கு ஒப்பந்தத் தொகை எவ்வளவென்று தெரியாது. பில் கிடைப்பதோ அரை ஆண்டு, கால் ஆண்டிற்கொரு முறை. இந்நிலையில் அவர்கள் தொழிலாளர்களுக்குக் கூலி கொடுக்கவேண்டிய நிலை. வேலை நேரத்தில் சிறு மழைத்துளி விழுந்தால் போதும். முழுநாள் வேலை செய்திருந்தால்கூட அன்று அரைநாள் அல்லது கால் நாள் கூலிதான் கிடைக்கும். இப்படி அவர்களுக்கு வாரமெல்லாம் உழைத்துக் கிடைக்கும் ஊதியமோ இரண்டரை ரூபாய் மூன்று ரூபாயாக இருக்கலாம். அதிலும் இரண்டணா, நாலணா 'சாமி உண்டியல் காசு'எடுத்துக் கொள்ளத் தவறுவதில்லை அந்தக் கண்ட்ராக்டர்கள்! சிறந்த உழைப்பாளிகளைவிட அங்குக் கூஜா தூக்குபவன் முன்னுக்கு வந்தான். திறமை மிகுந்த மெக்கானிக்குகள் அங்கு மதிக்கப் படவேயில்லை.

இரண்டாவதாகக் குடியிருப்பு வசதி உரிய காலத்தில் ஒழுங்காகச் செய்துகொடுக்கப்படவில்லை. முதல் இரண்டு வருடங்களும் வீடின்றி அவதிப்பட்டோர்கள் எண்ணிக்கை அதிகம். மூன்றாவது வருடத்தில், அதாவது வேலை செய்வோரின் தொகை குறைந்த நேரத்தில் ஓரளவு வசதி செய்துகொடுக்கப் பட்டது. 5000 தொழிலாளர்கள் வாழ்ந்த அந்த இடத்தில் ஒரு கூட்டுறவு சங்கக் கடையோ, அல்லது நியாயவாரக் கடையோ கிடையாது. கிருட்ணகிரியில் 10 அணாவுக்கு விற்கும் அரிசி இங்கே 13 அணாவாக விற்கப் பட்டது.

மூன்றாவது, போக்குவரத்தைப் பற்றிக் கூறவேண்டாம். பெரும்பான்மையான மக்கள் 5 கல் தொலைவிலுள்ள கிருட்ணகிரிக்கு நடந்துதான் சென்று வர வேண்டிய அவசியமேற்பட்டது. குதிரை வண்டிக்காரர்கள் கேட்கும் எட்டணா, பத்தணாவிற்கு எங்கே போவது? லோகல் பஸ் வருகிறது, வருகிறது என்றார்கள். அதுவும் வந்தது அணைமுடியும் தருவாயில்! அந்த பஸ்ஸும் மக்களின் வசதிக்கேற்ற காலங்களில் ஓடுவதில்லை. ஞாயிற்றுக் கிழமைகளில் சந்தைக்கு என்று ஒரு 'வேன்' அணையிலிருந்து செல்லும். அப்படி ஒரு வண்டி போவதாகவே தொழிலாளர்களுக்குத் தெரியாது. அதிகாரிகளின் பியூன்களுக்கே அதில் இடம் போதவில்லையே!

சுகாதாரத்தை நினைத்தாலே நெஞ்சு விம்மும். சுகாதார அதிகாரி ஒருவர் இருக்கிறார். அவருடைய அலுவல்களெல்லாம் பொழுது போக்கும் 'கிளப்' பிலேயே முடிந்துவிடும். இந்த மூன்றாண்டுகளும் மூன்று முறை டி.டி.டி அடித்திருப்பார்களானால் அது உலக அதிசயம்தான். ஒரு மருத்துவமனை கிடையாது. 1955 ஜூன், ஜூலை மாதங்களில் மலேரியாக் காய்ச்சலில் அவதிப் படாதவரே கிடையாது. கிருட்ணகிரியில் உள்ள மருத்துவமனைகளில் இடமில்லை. அப்படியே இருந்தாலும் நம் அதிகாரிகள் கொடுக்கும் சிபாரிசுக் கடிதங்கள் அங்கே குப்பைத்தொட்டியைத்தான் அழகுபடுத்தின. தனியார் மனைகளுக்குச் செல்ல வாய்ப்பும் வசதியும் இன்றி அந்தப் பேய்க்காய்ச்சலில் சிக்கிச் சீரழிந்தோர் ஏராளம். ஏறக்குறைய குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அரைநூறு உயிர்களை அக்கொடியக் காய்ச்சல் பலி கொண்டுவிட்டது. அதிலிருந்தே உடல் நலமுடன் பத்து தினங்களுக்குப் பார்ப்பதென்றால் அரிதுதான். வேலை நேரங்களில் கால்முறிந்தோர் கையிழந்தோர்களுக்கு சரியான சிகிச்சை அளிக்கப்படதில்லை. தொழிலாளர் நல சங்கத்தின் உதவிகொண்டோ, வேறு எவ்வகையிலோ அவர்கள் எந்தவித நிவாரணம் பெறவில்லை. 1957ம் ஆண்டு தமிழகம் முழுவதும் பரவிய 'புளு' காய்ச்சல் இங்கேயும் தன் கைவரிசையைக் காட்டத் தவறவில்லை. அந்த நேரத்தில் மக்கள் அடைந்த துயரை அளவிடமுடியாது. தினமும் காலை நேரத்தில் கிருட்ணகிரியிலுள்ள மருத்துவமனைகளுக்கு ஒரு வண்டியும், பாடசாலைக்கு ஒரு வண்டியும் செல்லும். அவைகளும் வழக்கம்போல் அதிகாரிகளின் ஆக்ரமிப்பிற்கு உள்ளடங்கியதுதான்.

ஆற்றைக் கடப்பதற்குப் பாலம் அமைக்கப்படாததால் வெள்ளம் வரும் காலங்களில் ஆற்றைக் கடக்க மக்கள் அடைந்த தொல்லைகள் அதிகம். காவேரி பட்டினத்தைச் சுற்றி வர வேண்டும். இக்கரையிலிருந்து அக்கரை செல்ல பன்னிரெண்டு மைல்களைக் கடக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. பாலத்தையும் அணைத் திறப்புவிழாவின்போதுக் கட்டி முடித்துவிட்டார்கள். இன்னும் எவ்வளவோ- அவ்வளவையும் குறிப்பிடுவது சாத்தியமில்லை.

இப்போது புரிகிறதா மிச்சப் படுத்திய 32 இலட்சம் எப்படி யென்று!

இதுபோன்ற குறைபாடுகள் நெய்வேலியிலும் நடந்துவிடாதபடி காமராசர் ஏற்பாடுகளைச் செய்வாரானால், நெய்வேலியால் திராவிட நாடு உறுதி பெறவும் வளம் பெறவும் ஏதுவாகும். செய்வாரா பிரதமர்? கனிமொழி தேவையில்லை. காரியத்தில் காட்டட்டும் கைவரிசையை!

ஆசிரியர்
கண்ணதாசன் நிகழ்ச்சிகள்

டிச. 15. இராணிப்பேட்டை
,, 21. சென்னை
,, 22. காலை, மதுரை
,, 22. மாலை, தூத்துக்குடி
,, 24. பழுவூர்.



"மாநிலக் கல்லூரி நிகழ்ச்சி"

ஆசிரியர் அவர்களுக்கு,
வணக்கம்.

சென்ற தென்றல் இதழை வழக்கம்போல் இன்முகத்துடன்வாங்கிய நாங்கள் பத்தாம் பக்கத்தைக் கண்டபோது கண்ணீர் பெருக்கினோம்; உள்ளம் நொந்தோம். பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனாரைப் பற்றிய கட்டுரையின் விளைவு அது. பொதுமக்கள் அந்த நிகழ்ச்சியை உண்மையென்று நம்பியிருக்கலாம். அவரை அறியாதவர்கள் 'ஏதோ' வென்று அமைதியடையலாம். ஆனால் தெ. பொ. மீ அவர்களோடு நெருங்கிப் பழகிய நாங்கள் வருந்துவது தவிர வேறொன்றும் செய்ய வழியில்லை.

நடந்ததென்ன ?

மாநிலக் கல்லூரிக்கு அறிஞர் அண்ணா அவர்களை அழைப்பதற்குப் பேராசிரியர் என்றுமே தடைக்கல்லாக நின்றதில்லை. மாருக, இவ்வாண்டு தொடக்கத்திலிருந்து, அறிஞர் அண்ணா அவர்களை அழைப்பதானல் விரைவில் செய்யுமாறு தமிழ்ப் பேரவைச் செயலாளரிடம் கூறியுள்ளார்.

15-11-57-ம் நாளன்று மாலை 4-30 மணிக்கு அறிஞர் அண்ணா அவர்களுடைய கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அன்று இரண்டு மணிக்கே பேரவைச் செயலாளர் அண்ணாவை அழைக்கச் சென்றார். 4-25 வரை அண்ணாவைக் காண இயலவில்லை என்று தொலைபேசியின் மூலம் தெரிவித்தார். 4-45 வரைக் காத்திருந்த பேராசிரியர் அவர்கள் 4-50-க்கு அறிவகத்திற்குத் தொலைபேசியின் மூலம் பேசியபோது, செயலாளரோ அறிஞர் அண்ணா அவர்களோ எங்கிருக்கின்றார்கள் என்ற தகவல் தெரியவில்லை. எனவே பேராசிரியர் அவர்கள் அறிவகத்தாரிடம், "பேரவைச் செயலாளர் வந்தால் அண்ணா வரும்வரைக் காத்திருந்து அவர்களுக்கு வசதியான இன்னொரு நாள் குறித்துவரும்படி கூறவும்" என்று சொன்னார்.

மாநிலக் கல்லூரியில் ஒலி பெருக்கி, பேரறை முதலியன பிற பிற துறைகளைச் சார்ந்தவையாதலானும், அண்ணா எங்கிருந்தார்களென்றே தெரியாததாலும் 4-55-க்கு பேராசிரியரவர்கள் மேடையேறி, "இன்று உங்களையெல்லாம் பெருத்த ஏமாற்றத்திற்குள்ளாக்குவதற்கு வருந்துகிறேன். அண்ணா அவர்களுக்கு வசதியான மற்றொரு நாளில் இக்கூட்டம் நடைபெறும்" என்று கூறி அக் கூட்டத்தைக் கலைக்க வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டது. இதனைத் தவருக உணர்ந்து கொதிப்படைந்த மாணவர்கள் பேராசிரியரைக் கண்டு காரணம் கேட்கப் பேராசிரியர் நடந்தது முழுவதையும் தெளிவாகக் கூறினர். மாணவர்களும் வெளியே சென்றனர். மாலை 5-15 மணிக்கு அண்ணா அவர்கள் வந்தார்கள். கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டது என்றறிந்து புன்னகையோடு திரும்பினார்கள். இதையறிந்த மாணவர்கள் உள்ளம் வேதனைப்பட்டது, வெதும்பியது. அதன் விளைவாக அன்றிரவே எழுந்ததுதான் நிகழ்ந்ததை மிகைப்படுத்திக் கூறும் துண்டறிக்கை. இரண்டு நாட்கள் சென்ற பிறகு அமைதியாக நிகழ்ந்ததை நினைவு கூர்ந்திருந்தால் பேராசிரியர் மேல் இவ்வளவு கொடிய பழியை ஏற்றியிருக்கமாட்டார்கள் என்பது உறுதி. இயற்கையில் ஏற்பட்ட சிறு தவறு தமிழ்ப் பேரறிஞர் இருவருக்குக் களங்கம் கற்பித்தது.

அறிஞர் அண்ணாவும் பேராசிரியர் தெ. பொ. மீ.யும்

அறிஞர் அண்ணாவிற்கும் பேராசிரியருக்கும் கொள்கையில் வேறுபாடு இருக்கலாம். ஆனால் அதற்காகப் பேராசிரியர், அண்ணாவை அவமதித்தவரல்லர். மேற்கூறிய நிகழ்ச்சி நடந்த மறுநாள் பேராசிரியர் மிக உருக்கமாக "1944லிலேயே அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நான் அண்ணாவைப் பேச அழைத்தேன். சிந்தாதிரிப் பேட்டைப் பள்ளிகளின் செயலாளனாக இருந்தபோதும் அண்ணாவைப் பேசவைத்தேன். அக்காலத்திலேயே அவரை அழைத்த நான் அரசியலில் அவர் சிறந்து விளங்கும் இன்று அழைக்கத் தயங்குவேனா? அவரை நம் பேரவைக்கு இன்னொரு முறையும் அழைத்து மேடைப்பேச்சுப் பற்றிய அவர் அனுபவத்தைக் கூறச் செய்ய வேண்டுமென்று விரும்பினேன். அவரும் தமிழன், நானும் தமிழன்; எங்களுக்குள் பகையேன்", என்று கூறினர்.

பன்மொழிப் புலவர் பல்கலைச் செல்வர் தெ. பொ. மீ. தமிழ்நாடு பெற்ற செல்வங்களில் ஒருவர். இலைமறை காயாக இருக்கும் தமிழறிஞர்களிலொருவர். அமைதியாக இருந்து அவராற்றும் பணிகள் பலப்பல. தமிழிலக்கிய வரலாற்றுத் துறையில் வையாபுரிப் பிள்ளை ஏற்படுத்திய களங்கத்தை நீக்கத் துடைத்தார். வடமொழி 'அர்த்த சாத்திரம்', 'பாத நாட்டிய சாத்திரம்' இவற்றைப் பின்பற்றி எழுந்ததே திருக்குறள் என்று கூறிய குறைமதியாளருக்கு விளக்கமாக அமைவது அவரது 'வள்ளுவர் கண்ட நாடும் காமமும்'. தெ. பொ. மீ.யின் தமிழ்ப்பணி நாடறிந்தது.

மாணவர்கள்பால் பெருமதிப்பும் பேரன்பும் கொண்டவர் தெ. பொ. மீ. அவரது கடந்த காலம் பற்றி நாங்கள் அறியோம். ஆனால் தமிழ்ப் பேராசிரியராக இன்று அவராற்றும் பணியை உடன் பழகுவதால் உணர்ந்துள்ளோம். தமிழைச் சூழ்ந்து வரும் இந்தியை விரட்டவும் கல்லூரிப் பயிற்று மொழியாகத் தமிழை ஆக்கவும் முனைந்து பணியாற்றுபவர் அவர். 'தமிழ் தமிழ்' என்று செயல் மறந்து திரியாமல் செயலாற்ற வேண்டுமென்று கூறுபவர். அண்ணாவின் இலக்கியத்தை விரும்பி இலக்கிய வரலாற்றிலே சேர்த்து மாணவர்களை ஆராயச் செய்துள்ளார். மாணவக் கல்லூரித் தமிழ் நூலகத்தில் அறிஞர் அண்ணாவின் நூல்களை வைத்து மாணவர்களைப் படிக்கச் செய்கின்றார்.

உண்மையென்றுணர்ந்ததை உரத்தோடு உரைக்கும் சான்றோர் பேராசிரியர் தெ. பொ. மீ. கல்லூரிகளில் தமிழ் பயிற்றுமொழியாக நாளையல்ல, இன்றே ஆக்கப்பெற வேண்டுமென்று ஊக்கத்தோடு உரைத்தவர் அவர். அத்தகைய வித்தகரை-துண்டறிக்கை செய்த சதியால்-'சின்னபுத்தி' என்ற 'தென்றல்' அழைக்க நேர்ந்ததே என்றெண்ணி வருந்துகிறோம்.

பேராசிரியர் தெ. பொ. மீ. பன்மொழிப் புலவரும் பல்கலைச் செல்வரும் மட்டுமல்ல. பண்பாடும் மிக்கத் தமிழர். இளமை கடந்துவிட்டது, இன்னும் அவர் ஆர்வம் குன்றவில்லை. தமிழ்த் தொண்டாற்றுகிறார். தமிழுக்காகவே வாழ்கிறார்.

இடையிலே எழுந்த களங்கம் நீங்குமாயின் அதுவே வருந்தும் எங்கள் உள்ளத்திற்கு மருந்தாகும்.

—தமிழ்ச்சிறப்பு வகுப்பு
மாணவர்கள்,
மாநிலக் கல்லூரி
சென்னை.

கதி. இராமனுதன்

தென்றல்-விளம்பர நிர்வாகி கதி. இராமனுதன் அவர்கள், பொங்கல் மலருக்காக விளம்பரம் சேகரிக்க, கடந்த 29-ம் தேதியன்று சுற்றுப்பயணத்தைத் தொடங்கியிருக்கிறார். தென்றல் வளர்ச்சியில் ஆர்வங்கொண்ட தோழர்களும், வணிகப் பெருமக்களும் இயன்றஅளவு விளம்பரம் சேகரித்துக் கொடுத்து அவரோடு ஒத்துழைக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

—கண்ணதாசன்

அத்திப்பழம்

- 5 -

அகத்தில் நிகழும் போராட்டம் முகத்தில் தெரிந்த போதே அதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று எண்ணினார்.

"என்னமோ சம்பந்தா, அங்கே உன் அம்மா எப்போதும் உன் நினைவாகவே கிடக்கிறாள். எனக்கு மட்டும் வேறு என்ன கவலை என்று எண்ணுகின்றாய்? ஊரிலே மதிப்போடு வாழும் குடியினர் நாம், உனக்குத் தெரியாதா என்ன? நல்லபடி நடந்து கொள். வெளிச்சமான வழியில் போகவேண்டும், இருட்டு வழி வேண்டாம், அவ்வளவுதான் நான் சொல்லமுடியும். நல்ல பழக்கங்கள் இருந்தால் எல்லோர்க்கும் நல்லது" என்று சொன்னார்.

"ஆகட்டும்பா, நான் நன்றாகத்தான் நடந்து கொள்ளுகின்றேன்." என்று ஞானசம்பந்தன் சொன்னான்.

ஆனால் அவன் தந்தை போன பின்னர்தான் ஏதோ பெரிய தவறு செய்வதைப் போல உணர்ந்தான். தான் செல்லும் நெறி செம்மையானது என்று சொல்ல இயலாது என்று உணர்ந்தான்.

ஒருகணம் ஆர்வமும் ஆவலும் பாசமும் சேர்ந்து விளங்கும் தன் பெற்றோரை எண்ணினான். அவர்களுக்குத்தான் தவறு இழைப்பதாக உணர்ந்தான்.

"இனி நல்லபடி நடந்து கொள்ளவேண்டும்" என்று எண்ணியவனாய் அறையில் இங்கும் அங்கும் தொங்கிக்கிடந்த துணிகளை எடுத்து மடித்து வைத்தான். நூல்களையும் ஏடுகளையும் எடுத்துத் தட்டி ஒழுங்காக அடுக்கிவைத்தான். தரையைக் கூட்டித் தூய்மைப்படுத்தினான். தண்ணீர்ப்பானையை எடுத்து வெளியில் வைத்தான்.

எல்லாம் முடிந்து அலுத்து நாற்காலியில் உட்கார்ந்ததும் எதையோ நினைத்துக்கொண்டவன்போல் மேஜை அறையைத் திறந்தவன் திடுக்கிட்டு நாற்காலியில் சாய்ந்து கொண்டான். அங்கே சிகரட் கூடும், தீப்பெட்டியும் இருக்குமா என்று பார்க்கத்தான் அந்த அறையை இழுத்தான். எதிர்பார்த்தது அங்கே இருந்தது. அவனை என்னவோ செய்தது. செய்யக்கூடாததைச் செய்தவன்போல் விழித்துக் கொண்டிருந்தான், சற்றுநேரம்.

பிறகு "ஆமாம் இதைவிட்டு விடவேண்டும்" என்று சொல்லிய வண்ணம் அந்த சிகரட் கூட்டையும் தீப்பெட்டியையும் எடுத்து சன்னல் வழியாக வெளியே வீசி எறிந்துவிட்டு நிமிர்ந்து உட்கார்ந்தான்.

"என்ன சம்பந்தா என்னதான் உன் அப்பா வந்துபோனாலும் இப்படியா...ஊம்.... இவ்வளவு அலட்சியமா? எவ்வளப்பா பணம் கொடுத்து விட்டுப் போனார் உனக்கு? புதுபாக்கெட்; இன்னும் எட்டு சிகரட் இருக்கிறது. அதை முழுசாக எடுத்து வீசிவிட்டாயே......ஊம் உனக்கென்ன...என்று சொல்லிய வண்ணம் இவன் வீசியதை எடுத்துக்கொண்டு உள்ளே வந்தான் ஏகாம்பரம்.

ஞானசம்பந்தன் என்ன பதில் சொல்கின்றான் என்றுகூட காத்திராமல் அவன் உள்ளே வந்து கூட்டைத் திறந்து ஒரு சிகரட்டை எடுத்து மெல்ல இரண்டுமுறை அதன் அடிப்பாகத்தைத் தட்டிவிட்டு 'டக்'கென்று வாயில் வைத்துக் கொண்டு அதைப் பற்றவைத்து,

'ஊம்...இந்தா" என்று ஞானசம்பந்தனிடம் கூட்டை நீட்டினான்.

"எனக்கு வேண்டாம்" என்று ஞானசம்பந்தன் தடுத்தான்.

"ஏன்."

"நான் இனிமேல் அதைவிட்டு விடப்போகின்றேன்."

"அடேயப்பா.... இதையா..... ஹா... ஹா....கட்டாயம் விட்டு விடுவாய்...இதெல்லாம் என்ன, இன்று உன் அப்பா வந்துபோன தினமா...நல்ல பூசையா?...அட பயந்தாங்குளி...இதிலே என்ன இருக்கிறது? சரி...நீ விட்டு விடுவதாய் இருந்தால் விட்டுத் தொலை. அதை இப்படித் திடீரென்று விட்டால் எப்படி?... இதோ இதை வாங்கிக்கொள்! "இதுதான் என் வாழ்க்கையில் நான் புகைக்கும் கடைசீ சிகரட்" என்று சொல்லிச் சாம்பலாக்கி அதோடு உன் சிகரட் பழக்கத்தையும் பொசுக்கிவிடு' என்று ஒரு பெரிய சொற்பொழிவே நிகழ்த்தினான்.

ஞானசம்பந்தன் ஒன்றும் பேசாமல் சற்றுநேரம் தன் நண்பனையே உற்றுப்பார்த்தான். 'ஆமாம் அவன் சொல்வதும் சரிதான். கடைசியாக இருக்கட்டும் என்று கூட்டைத் திறந்து ஒரு சிகரட் எடுத்து அதை கூட்டின்மீது தட்டிக்கொண்டே தீப்பெட்டிக்கு கையை நீட்டினான்.

"ஹா...ஹா...அதுதான் நல்ல பிள்ளைக்கு அழகு என்று ஏகாம்பரம் இரண்டு மூன்று அறைகளுக்கு அப்பாலும் கேட்குமாறு பெருங்குரலில் சிரித்தான்.

★

"என்ன அஞ்சல் அது? பையனா எழுதியிருக்கின்றான்?" என்று கேட்டுக்கொண்டே சிவகாமி அம்மாள் தெருத் தாழ்வாரத்திற்கு வந்தாள்.

அவளுக்கு ஏதும் பதில் சொல்லாமல் பெரியசாமி உறையைக் கிழித்து அதன் உள்ளே இருந்த கடிதத்தை எடுத்துப் படித்துக் கொண்டிருந்தார். சிவகாமி அம்மாள் ஆர்வத்துடன் கணவனின் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

"ஊம்" என்று ஏதோ தனக்குள் எண்ணியவர் போல் "என்ன இப்படி ஆகிவிட்டான்" என்று முணுமுணுத்தார்.

"யார் எப்படி ஆகிவிட்டார்கள் சொன்னால்தானே" என்று சிவகாமி அம்மாள் குழைந்தாள்.

"வேறு யார்? எல்லாம் உன் அருமை மகன்தான்" என்று சூடாகச் சொன்னார் பெரியசாமி.

பெரியசாமியாக இருக்கட்டும், வேறு யாரேனுமாக இருக்கட்டும். தன் மகன் நல்லது செய்தாலோ, நல்ல பெயரும் புகழும் பெற்றாலோ மனைவியிடம் அவனைப்பற்றிப் பேசுபோது உவகை பொங்க 'நம்ம பையன்' என்று சொல்லுவதும், அதே மகன் செய்யத்தகாதது ஒன்றைச் செய்திடும்போது 'உன் பிள்ளையைப் பார் இங்கு' என்று அழைத்துக் காட்டுவதும் குடும்பங்களில் நெடு நாட்களாக இருந்து வருகின்ற பழக்கம், மனைவியும் அப்படித்தான். இந்த வழக்கம் இன்று நேற்று உண்டானது இல்லை. நெடுங் காலமாக இருந்து வருகின்றது. அதனால் தான் பெரியசாமி தன் மகன் மீது கோபம் கொண்டிருந்த போது 'உன் அருமை மகன்' என்று ஞானசம்பந்தனை வேறுபடுத்திச் சொல்லி தன் வெறுப்பை வெளிப்படுத்திக் கொண்டார்.

ஆனால் அந்தத் தாய் மனதில் அப்படி உடனே வெறுப்பும் சினமும் எழுந்துவிடவில்லை. தன் மகனைப்பற்றி எண்ணியவுடன், அவன் எழுதிய கடிதத்தைக் கண்டவுடன் அன்பும் ஆர்வமும் பெருகிற்றே யொழிய ஆத்திரமும் ஆவேசமும் பிறக்கவில்லை.

"என்னதான் எழுதியிருக்கின்றான், சொல்லுங்கள். சொல்லாமல் இப்படிக் கொதித்தீர்களானால் எனக்கு என்ன விளங்குகின்றது" என்று சிவகாமி அம்மாள் சொன்னாள்.

"வேறு என்ன எழுதியிருக்கின்றான், உடனே பணம் தேவை; ரூபாய் ஐம்பது அனுப்புங்கள்" என்று உத்திரவு போட்டிருக்கின்றான்.

"என்ன செலவோ என்னவோ பாவம். கல்லூரியில் ஆறுநூறு பிள்ளைகள் படிக்கின்றார்கள் என்றீர்களே; அத்தனை பேருடன் சேர்ந்து பழகுகின்றவன் அவர்களைப்போல இருக்க வேண்டாமா? சம்பந்தன் ஒன்றும் அப்படி வீண் செலவு செய்து வெறியாட்டம் ஆடுகின்றவன் இல்லை" என்று சிவகாமியம்மாள் மகனுக்காகப் பரிந்து பேசினாள்.

"ஆமாம் காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு என்று எப்பொழுதோ பழமொழியெழுதி வைத்திருக்கின்றார்களே. நீ எப்போதும் இப்படித்தான்; சம்பந்தன் நல்லவன் நல்லவன் என்று கிளிப்பிள்ளையைப்போல பாடிக் கொண்டிருக்கின்றாய். உன்னால் தான் அவன் கெட்டுப் போனான்!

"கெட்டுப் போனான் என்று ஏதோ கீழே கொட்டிவிட்ட பாலைப்போல அவனை விலக்கி வேறுபடுத்திச் சொல்லுகின்றீர்களே. அவன் என்றைக்கு இருந்தாலும் நாம் சொல்கிறபடி கேட்கின்றவன். நாளைக்கே நல்லது சொன்னால் கேட்டுக்கொள்ளுகின்றான்.

"ஆமாம். நீ நல்லது சொல்லுவாய் அதை நாடிக் கேட்டு நலம் பெறலாம் என்று அவன் இந்த மாத்தூருக்கு வருகின்றான், இரு. அவன்தான் ஏதோ சென்னையிலேயே பிறந்து வளர்ந்தவன்

போல அங்கேயே கட்டுண்டு நிற்கின்றானே. மாத்தூர் என்று ஒரு ஊர் இருப்பதாகவோ அங்கே அவனை நினைத்துவாடும் சிவகாமி இருப்பதாகவோ எண்ணுகின்றவனாகத் தெரியவில்லையே" என்று பெரியசாமி என்னவோ சொன்னார். ஆனால் சிவகாமி அம்மாளின் மனம் அதையெல்லாம் கேட்டுக்கொண்டிருக்கும் நிலையில் இல்லை.

யாருமில்லாத ஊரில், தெரியாதவர்களிடையில் மகன் என்ன பாடு படுகின்றானோ, எவரிடம் என்ன கடன் பட்டானோ என்ன துன்பம் அவனைத் துரத்தி வந்து வாட்டுகின்றதோ என்று தான் கலங்கினாள்.

"போனால் போகின்றான். நாளைக்கு எப்படியாவது அவனுக்கு ஐம்பது ரூபாய் அனுப்புங்கள்" என்று தான் கணவனிடம் சொன்னாள்.

"பார்க்கலாம். எப்படியும் அனுப்பத்தானே வேண்டும்" என்று பெரியசாமி வானத்தை அண்ணாந்து பார்த்தவண்ணம் முகவாயைத் தேய்த்தபடியே நெடுநேரம் கயிற்றுக் கட்டிலில் ஓய்ந்து போய்க் கிடந்தார்.

பெரியசாமிக்கு ஐம்பது ரூபாய் பெரிய தொகை அல்ல, நினைத்தால் இந்தக் கைக்குத் தெரியாமல் அந்தக் கையில் புரட்டிவிடக் கூடிய சின்னத் தொகைதான். ஆனால் நிலைமை இப்போது அந்தத் தொகைக்கும் அவரைக் கேட்டால் கிடைக்குமா, இவர் நமக்கு வேண்டியவர்தானே கொடுப்பாரா என்று மேலும் கீழும் எண்ணச் செய்தது.

மாத்தூர் பண்ணையில் இருபது காணி நிலம். பெரியசாமிக்குச் சொந்தம். ஆனால் மாத்தூரில் மழை பெய்தால்தான் தண்ணீர். மிச்சம் தண்ணீர் கோடை காலத்தில் 'உனக்கு எனக்கு' என்று போட்டி போட்டால்தான் கிடைக்கும். ஆண்டு தோறும் பருவ மழை தவறாமல் இருந்து வயலில் பயிரும் பச்சையுமாக இருந்தால் ஞானசம்பந்தனைக் கல்லூரியில் படிக்க வைப்பது பெரியசாமிக்கு ஒரு செலவாகவே இருக்காது. ஆனால் இப்போது தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக ஏரியும் நிரம்பவில்லை, பயிரும் தழைக்கவில்லை. எப்படியோ சமாளித்துவிடலாம் என்று ஏதோ குருட்டுக் கணக்குப் போட்டு மகனைக் கல்லூரி வாயிற்படிக்குள் நுழைத்துவிட்டு வந்தார். ஆனால் அந்த மகனோ கிடைத்த புல்லும் வைக்கோலும் தின்று தொழுவத்தில் வளரும் எருதாக இல்லாமல் எது கிடைத்தாலும் தின்று இன்னும் என்ன என்று கேட்கும் யானையாக இருக்கத் தலைப்பட்டான். யானையைக் கட்டித் தீனி போடுவது என்ன என்று பெரியசாமிக்குத் தெரியாது. வெறும் பழமொழியாகத்தான் இதுவரை அந்தத் தொடரைக் கருதிவந்தார். ஆனால் இப்போது ஞானசம்பந்தன் கல்லூரிக்குப் போனபின்னர்தான் அந்தப் பழமொழியின் பொருள் என்ன என்பது புரிந்தது.

சேர்க்கின்றபோதே செலவு. பின்னும் செலவு. அவ்வப்போது இவராக கையில் கிடைத்த 'ஐந்தும் பத்தும்' அஞ்சல் நிலையத்தில் செலுத்தி 'மகன் ஞானசம்பந்தனுக்கு அநேக ஆசீர்வாதங்களுடன்' அனுப்பிக் கொண்டிருந்தார். அந்த மகன் அதையெல்லாம் வாங்கி வைத்துக்கொண்டு 'அன்புள்ள அப்பாவுக்கு இங்கு செலவுக்கு இன்னும் இருபது அனுப்புங்கள்' 'முப்பது அனுப்புங்கள்' என்றெல்லாம் எழுதிக்கொண்டிருந்தான்.

பலமுறை தட்டாமல் தயங்காமல் பெரியசாமி அந்தத் தொகையையெல்லாம் அனுப்பிக்கொண்டுதான் இருந்தார். ஆனால் இந்த முறை இன்னும் ஒரு ஐம்பது என்றதும் அவருக்கு என்னவோபோல் இருந்தது. எப்படி அனுப்புவது என்று இருந்தது. என்ன செய்கின்றான் இவ்வளவு பணத்தையும் என்று திகைப்பாக இருந்தது.

மறுநாள் விடிந்ததும் பெரியசாமி எங்கெங்கோ அலைந்தார். எவரெவரிடமோ போனார். எப்படியோ அன்றைய அஞ்சலிலேயே ஐம்பது ரூபாயை மகனுக்கு அனுப்பிவிட்டார்.

மா.கி.தசரதன் எம்.ஏ.

பட்ட கடனை அடைத்தாக வேண்டும், மேலும் கடன் படாமல் இருக்க வழி தேடி ஆக வேண்டும் என்ற நிலை வந்துவிட்டது இப்போது பெரியசாமிக்கு. அதனால் பணம் அனுப்பிய பிறகு எதை எதையோ எண்ணினார். படிக்க வைக்க வேண்டும் என்ற ஆசையை நொந்துகொண்டார். "எனக்கு ஏன் இப்படி எண்ணம் போயிற்றோ தெரியவில்லையே." என்று தன் மனதில் எண்ணியவாறு நாட்களைக் கழித்துக் கொண்டிருந்தார். 'என்ன செய்வது; ஏதோ ஒரு செயலைத் தொடங்கிவிட்டோம்; இதெல்லாம் தொடங்குவதற்குமுன்னே எண்ணிப் பார்த்திருக்க வேண்டியவை. இனி எண்ணிப் பயன் என்ன? எப்பாடு பட்டேனும் நம்மால் முடிந்தவரை பார்க்க வேண்டியதுதான்' என மனதிற்கு ஆறுதல் கூறிக்கொண்டார்.

வேறு யாரும் ஆறுதல் கூறுவதற்கு இல்லாத நேரத்தில் நாமேதான் நம்மனத்திற்கு ஆறுதல் சொல்லிக்கொள்ள வேண்டும்.

மாலை நேரம் மாடுகள் எல்லாம் மெல்லஅசைந்து ஆடிக்கொண்டு தொழுவம் நோக்கி வந்துகொண்டிருந்தன. அவற்றின் கழுத்தில் கட்டியிருந்த மணிகள் அந்த மாடுகள் அசைந்து அசைந்து நடக்கின்றபோது இப்படியும் அப்படியும் மாறி மாறி ஒலித்துக் கொண்டிருந்தன. வீடுதோறும் மாடங்களில் விளக்கு ஏற்றி வைத்திருந்தனர். பகலவன் மறைந்துவிட்டான் என்றாலும் அவன் அள்ளித்தெளித்த வண்ணத் துகள்கள்போல் மேற்கு வானத்தில் வகை வகையான கோலங்கள் காணப்பட்டன.

இந்தக் காட்சிகள் ஒன்றையும் பெரியசாமி கண்டு களிக்கவில்லை. தலையைத் தாழ்த்தித் தரையை நோக்கியவாறு நடந்து வந்துகொண்டிருந்தார். ஏரியின் எதுவாயில இருந்த சோளக் கொல்லையைச் சுற்றிப் பார்த்துவிட்டு வீடுநோக்கி வந்துகொண்டிருந்தார் அவர். நல்ல நெற்கதிர்கள் மணி மணியாகக் காட்சிதரும் வயல் வெளி எல்லாம் பூச்சி அடித்து பயிர்கள் பாழாய்ப் போனபின் சோளம்தான் அவர் மனதில் கொஞ்சம் நம்பிக்கை எழக் காரணமாக இருந்தது. ஆனால் அந்தச் சோளக்கொல்லையை இன்று போய்ப் பார்த்து வந்த பிறகு கொஞ்சம் ஒட்டி ஊசலாடிக் கொண்டிருந்த நம்பிக்கையும் ஒழிந்துபோயிற்று. தண்ணீர் இல்லாமல் அந்தக் கொல்லைகள் வெடித்துப் பாளம் பாளமாக வாயைத் திறந்து 'ஆ' என்று அண்ணாந்து பார்த்துகொண்டிருப்பவன்போல் தோற்றமளித்தன. பெரியசாமி வானத்தை அண்ணாந்து பார்த்தார். அங்கே மாசும் இல்லை; மறுவும் இல்லை. துடைத்துவிட்ட சுவரைப்போல் அது 'தூய்மையாக' விளங்கிற்று. மறுபக்கம் திரும்பி ஏரியைப் பார்த்தார். அங்கே தண்ணீர் தேங்கியிருந்தது. 'குத்து மதிப்பாக' ஒரு கணக்குப் போட்டுப் பார்த்தார். மேட்டு மதகைத் திறந்தாலும் இன்னும் ஒரு திங்கள் பாய்வதற்கு வேண்டிய தண்ணீர் இருந்தது. இருந்து என்ன பயன்? அந்தத் தண்ணீர் பாய்ந்து பயன் பெற வேண்டிய வயல்களில் பூச்சியும் புழுவும் மண்டிக் கிடந்து பயிர்களைத் தின்று தீர்த்துவிட்டன. இதோ பூச்சி விழாத சோளக் கொல்லைகளில் பயிர் சோர்ந்து வாடிக் கொண்டிருந்தன. ஏரியில் இருந்த தண்ணீர் எதற்கும் பயன்படாமல் அங்கே காற்றடித்தபோதெல்லாம் அலைகளை எழுப்பிக்கொண்டிருந்தது. ஏரிக்கும் சோளக் கொல்லைக்கும் இடையில் நெடுந் தொலைவு இல்லை. ஆனால் அந்த ஏரியில் இருந்த தண்ணீர் பள்ளத்தில் இருக்கும் வயல்களுக்குப் பாய்ந்தோடுமே ஒழிய மேட்டிலே இருக்கும கொல்லைகளுக்கு எப்படி ஏறிச் செல்லும்? இதுதான் உலகம் என்று பெரியசாமியின் வாய் முணுமுணுத்தது.

"எது ஐயா உலகம்?" என்று சொல்லிக்கொண்டே மாத்தூர் மணியக்காரர் வந்து பெரியசாமியின் தோள்களில் கையைப் போட்டார்.

"எதுவா? இதோ விளையாமல் வெடித்து வாய் பிளந்து நிற்கும் நன்செய்க்கும் புன்செய்க்கும் நீங்கள் தை பிறந்ததும் கொண்டுவா தீர்வையை என்று கேட்கப்போகின்றீர்களே, அதுதான்" என்றார் பெரியசாமி.

இதைப் போன்ற நேரங்களில் எப்படித் தப்பித்துக்கொள்ளுவது என்பது அந்த மணியக்காரருக்குத் தலைகீழ் பாடம். இங்கே பேசினால் இன்னல்தான் வரும், வாதம் வளரும் என்பதனை அவருக்கு அநுபவம் உணர்த்தியிருக்கிறது. ஆகவே "என்ன செய்வது பெரியசாமி... என் தொழில் அப்படி. நானா கேட்கின்றேன். மேலே இருந்து உத்திரவு" என்று சொல்லியவாறு அவர் வேறு பக்கமாகப் போய்க் கொண்டிருந்தார்.

'இங்கே வயலில் வருவாய்க்கு வழியைக் காணோம். ஆனால் அங்கே, ஞானசம்பந்தன் பணம் கொண்டு வா கொண்டு வா' என்று கேட்டவண்ணம் இருக்கிறானே என்று எண்ணியவராய் வீடு திரும்பிக்கொண்டிருந்தார். அதனால்தான் பெரியசாமி ஒன்றையும் காணாமல் தலையைத் தாழ்த்தி தரையையே பார்த்தவராக சோர்வாக வீடு திரும்பிக் கொண்டிருந்தார்.

முன் வாயிற்படியைத் தாண்டி தாழ்வாரத்தில் போகும்போதே ஞானசம்பந்தனின் குரல் பெரியசாமியின் காதில் விழுந்தது.

"வேண்டாம்'மா, வேண்டாம்."

"இதோ இது மட்டும். பூ மாதிரி இருக்கிறது பார்."

"போதும்'மா எனக்கு."

"இதோ இது ஒன்றுமட்டும்" என்று அந்தத் தாய் எதையோ தன் மகனின் வாயில் திணித்து வயிற்றை நிரப்பிக்கொண்டிருந்தாள். ஞானசம்பந்தன் சின்னப் பிள்ளையாக இருந்தபோதும் இப்படித்தான், வளர்ந்து பெரிய ஆள் ஆகிவிட்டிருந்த போதும் இப்படித்தான். அவனுக்கு என்ன வேண்டும், எவ்வளவு வேண்டும் என்பதனையெல்லாம் சிவகாமி அம்மாள்தான் தீர்மானித்துச் சொல்லுவாள்.

இந்த நேரத்தில் உள்ளே போவதா வேண்டாமா என்று எண்ணித் தயங்கியவராக தெருத் தாழ்வாரத்தில் கிடந்த சாய்வு நாற்காலியிலேயே சாய்ந்துகொண்டு இரண்டு கைகளையும் தலைக்கு அணையாக வைத்துக்கொண்டு அமைதியாகக் கிடந்தார். ஞானசம்பந்தனுடன் முன்னேபோல் ஆர்வத்துடன் பேச வேண்டும் என்ற எண்ணமே பெரியசாமிக்கு அப்போது எழவில்லை. கல்லூரிக்கு அனுப்பிய பிறகு ஞானசம்பந்தனுக்கும் தனக்கும் பெரிய இடைவெளி ஏற்பட்டுவிட்டதைப்போல உணர்ந்தார். அந்த மகன் தன்னை விட்டு நெடுந்தொலைவு விலகி விலகிச் செல்வதாக ஒரு உணர்ச்சி பெரியசாமிக்கு உண்டாயிற்று.

தொடரும்

— 2ம் பக்கத் தொடர்ச்சி —

நேரத்தை அதிகமாக்கியிருக்கின்றனர்!

முந்தைய மருந்துக்காவது திடமானதோர் தேகம் தேவை என்றார் தயாரிப்பாளர். ஆனால் இந்த மாத்திரையோ இன்னும் எளிதானது. பலவீனமான இதயமுள்ளோரும் எவ்வித பயமில்லாமல் இதைச் சாப்பிட்டுப் பயன்பெறலாம். ஒருநாளைக்கு இரு முறை உட்கொள்ளப்படும் இம்மாத்திரைமூளையில் பசியைக் கட்டுப்படுத்தும் 'அப்பிஸ்டாட்' என்றப் பகுதியில் வேலை செய்து பசியின்மையை உண்டாக்கி விடுகிறது. இந்த மருந்தைச் சாப்பிடுவதால் உடலிலோ, உள்ளத்திலோ எவ்வித தீங்கும் ஏற்படுவதில்லை. சாதாரணமாக இதைப் போன்ற மற்ற மருந்துகளுக்கு உண்டான இரு குறைகள்—இரத்த அழுத்தம் அதிகமாதல்; மதுவைப்போன்று திடீர் வீரியமளித்தல் - இந்த மாத்திரைக்குக் கிடையாது.

ஒரு ஆங்கில பத்திரிகை நிருபர் இதன்மூலம் ஆறே நாட்களில் ஏழு ராத்தல் எடையில் குறைந்திருக்கிறார். சாப்பிடும் ஆசையை கணிசமான அளவுக்கு குறைத்து அதிகமாக தாகத்தை ஏற்படுத்துகிறது. என்பதுதான் இவர் கண்ட அனுபவம். இதைத் தவிர வேறு ஒரு விளைவும் கிடையாது. எனவே எவ்வளவு திரவபதார்த்தம் சாப்பிட்டாலும் அதுநிச்சயம் சதைப் பாகத்தை வளரவிடாது. மாறாக ஆகாரம் குறைவதால் எடையும் குறைந்து மெல்லிய உருவம் ஏற்பட ஏதுவாகிறது.

மருத்துவர்களும், மயக்குமுண்டாக்குபவர்களும் (ஹிப்னடிஸ்ட்ஸ்). போகிற போக்கைப் பார்த்தால் கூடிய சீக்கிரத்தில் உலகம் முழுவதும் நல்ல கட்டுமஸ்தான தேகம் படைத்த ஆண்களும், நல்ல வாளிப்பான உடற்கட்டும், வண்ண முக வெட்டும் உள்ள பெண்களும் கிரமமாகிவிடுவார்கள். ஒரு குண்டோதரனையோ, உருட்டு சட்டிப் பொம்மைகளையோ, பீப்பாய் வடிவத்தினரையோ காண்பது சிரமமாகிவிடும். இந்தப் பெண் அழகில்லை என்ற குறைபாடு நீங்கி 'ஐயோ! யாரைத் தேர்ந்தெடுப்பது; இவளுக்கு மற்றவள் அழகாயிற்றே; அடுத்தவள் அழகு அவளைவிட அபாரமாயிற்றே' என்ற மனப்போராட்டம்தான் ஏற்படும்! யார் கண்டார்கள் நாளை நடக்கப் போவதை! ..அதுவும் இந்த விஞ்ஞான வேகத்திலே! ★

★ ★ ★

— 3-ம் பக்கம் தொடர்ச்சி —

கடைசிவரை மனப்பூர்வமாக வரவேற்கப்படாத தலைவராக இருந்தார். இந்தியத் துணைக் கண்டத்தின் வட பகுதியில் எழுந்த புரட்சிகளுக்கெல்லாம் நேரிலே சென்று ஆவன செய்து தன்னை உயர்த்திக்கொண்ட நேரு, தென்னிந்தியாவில் பன்னெடுங் காலமாக இருந்துவரும் நாட்டுவிடுதலைப் பிரச்சினையைக் கடைசிவரை தீர்க்கவில்லை. அதற்கு மாறாக, தென்னாட்டவர்களை அவமதிக்கும் வகையில் டில்லியிலிருந்துகொண்டு பரிபாலனம்செய்துவந்தார்.பண்டித நேரு செய்யத்தவறிய மிக முக்கியமான காரியங்களில் ஒன்று. தமிழர்களின் பிரச்சினை கவனிக்கப்படாததாகும்'' என்று நிச்சயமாக எழுதியே தீருவான். தன்னுடைய இறுதிக் காலம் வரை கீர்த்தியோடு வாழ்ந்த சிவாஜிக்கு ஏற்பட்ட களங்கத்தைப்போல் நேருவுக்கும் ஏற்படத்தான் வேண்டுமா? நேருவின் பின்னோடிகள் இதைத் தான் விரும்புகிறார்களா? 'சிவாஜி'யைத் திறந்துவைத்த நேரு இதைப் புரிந்துகொள்ளவில்லையானால், 'நேருஜி'யின் சிலையைத் திறந்து வைக்கப் போகும் வேறொரு 'ஜி' கண்டிப்பாக ஒரு காலத்தில் குறிப்பிடத் தவறமாட்டான். ★

நேரில் ஆங்கிலம் கற்பிப்பதற்கெனப் பிரத்தியேகமாக சென்னையில் ஏற்பட்டிருக்கிற
மாபெருங் கல்வி அரங்கம்



THE SCHOOL OF ENGLISH LEARNING

ஆங்கிலக் கல்வி நிலையம்,

60, பிராட்வே - மண்ணடி - சென்னை - 1.

தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்

ஒரே வருடத்தில்

அடிப்படையிலிருந்து இலக்கண ரீதியாக

இங்கிலீஷ் திருத்தமாக நேரில் கற்கலாம்

வசதிப்படி காலையிலோ மாலையிலோ வகுப்பிற்கு வந்து ஒருமணி நேரம் படித்தால் போதுமானது

சென்ற வருட டிசம்பர் மாதம் ஆரம்பமாகிய இங்கிலீஷ் வகுப்புகள் இந்த வருட டிசம்பரில் முடிவடைகின்றன.

புதிய வகுப்புகள்

டிசம்பர் 10ந் தேதி ஆரம்பமாகின்றன.

வகுப்பில் சேர விண்ணப்பம் செய்துகொள்ள

கடைசி தேதி 9-12-57

ஒரு நாட்டின் எழுச்சி கல்வி வளர்ச்சியில் உள்ளது. கல்வியில் மொழிக் கல்வி பிரதானமானது. ஏனென்றால், மொழிதான் மண் குடிசைகூட கட்டத் தெரியாதிருந்த மனித சமுதாயத்தை நூறு அடுக்கு மாளிகையைக் கட்டும் திறமை கொள்ளச் செய்தது. ஆங்கிலம் உலகமெங்கும் பேசப்படும் மொழி ஆகையால் நம் வளர்ச்சியைக் கருதி ஆங்கிலம் கற்பது அவசியம். இந்த அவசியத்தை எங்கள் கலைமன்றம் உன்னத முறையில் பூர்த்தி செய்வதை நேரில் அறிவீர்!

முழு விவரங்களை நேரில் வந்து தெரிந்துகொள்க.

முக்கிய அறிவிப்பு: கல்வி நிலையம் எல்லா நேரங்களிலும் திறந்திருக்கும். 16 வயதுக்கு மேற்பட்டவர்களே இவ்வகுப்புகளில் சேரலாம். பெண்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள். ஓரளவு இங்கிலீஷ் தெரிந்தவர்களும் இங்கு நடைபெறும் வகுப்புகளில் சேர்ந்து திருத்தமாகக் கற்றுப் பயனடையலாம்.

திராவிடர் நாட்குறிப்பு 1958.

தி. மு. கழக முழு விவரம் அடங்கிய ஒப்பற்ற டயரி

இதில் அண்ணாவின் 365 பொன்மொழிகள், தலைமைக் கழக செயற்குழு, பொதுக்குழு விவரங்கள், பேச்சாளர் முகவரி, 15ல் கிளைகளின் விவரம், தபால் தந்தி, ஆவணப் பதிவு, வருமான வரி கட்டண விவரம் உள்ளன.

டயரி 1க்கு ரூ 1-2-0 கழிவு 20% செலவு தனி 1 டயரி வேண்டுவோர் ரூ 1-12-0 அனுப்பவும்.

தி. மு. க. காலண்டர்

15 தி. மு. க. தலைவர்களின் உருவங்கள் அடங்கிய 15 - 20 அளவுள்ள மூவர்ண படம் 1க்கு 6 அணா, மேற்படி காலண்டர் 1க்கு அணா 8 கழிவு 20%. 50 வகை பொங்கல் வாழ்த்துக்கள் உள்ளன. மாதிரி செட் 1க்கு ரூ 3-8-0 அனுப்பவும்.

போர்வாள்— 128, பிராட்வே, சென்னை-1.

சந்தாதாரர்கள் கவனிக்கவும்

இந்த ஆண்டு "தென்றல்" பொங்கல் மலர் சிறப்பாக வெளிவர இருக்கிறது.

மலர் தேவையுள்ளோர் முன்கூட்டியே ரூ 2 அனுப்பிவிட வேண்டும்.

மலருக்குப் பணம் அனுப்பும் பொழுது உங்கள் சந்தா எண்ணை குறிப்பிட மறவாதீர்கள்.

நிர்வாகி
"தென்றல்"

ஏஜண்டு தோழர்களுக்கு –

'தென்றல் பொங்கல் மலர்' தேவையான பிரதிகளுக்கு கமிஷன் அணா 8 நீக்கி பிரதி ஒன்றுக்கு ரூ 1-8-0 வீதம் பூராத் தொகையும் முன் பணமாக அனுப்பி வைக்க வேண்டும். முன் பணமின்றி கண்டிப்பாக மலர் அனுப்பி வைக்கப்படமாட்டாது. குறைந்த பிரதிகளே தயார் செய்கிறோம். தேவைக்கு முன் கூட்டியே தெரிவிக்கவும். மணியார்டர் கூப்பனில் "பொங்கல் மலருக்காக" என்று குறிப்பிட்டு எழுதுங்கள். தென்றல் பட்டியல் தொகையும் மலருக்கான தொகையும் சேர்த்து அனுப்பக்கூடாது.

நிர்வாகி,
தென்றல்.

திருப்பத்தூர் வ. ஆ.

நகர தி. மு. கழக உறுப்பினர் எ. கண்ணன் அவர்களின் துணைவியார் லட்சுமி அம்மையார் அவர்களுக்கு 30-11-57 சனிக்கிழமை காலை 7½ மணி அளவில் ஆண் குழந்தை பிறந்தது. தாயும், சேயும் நலம்.

இதுதான் திராவிடநாடு

-11-

கா. அப்பாதுரையார்

வள்ளுவர் நெறியில்வந்த திராவிட இயக்கத்தின் மூலமுதல் ஒளி இதே வள்ளுவர் நெறியின் இனங் கடந்த நிழலொளியாக விளங்கிய காந்தியடிகளுடன் ஒன்றுபட இருந்த அந்நாளைப் பொன்வாய்ப்பைத் தமிழகப் பிராமணத்தலைவர் அன்று அழித்தனர். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அறிஞர் அண்ணா அதே ஒளியை முன்னிலும் விளக்கமுடன் திராவிட நாட்டின் பிராமண சமுதாயத்துக்கே அளிக்க முன்வந்துள்ளார். திராவிட நாட்டுப் பிராமண சமுதாயத்திற்கே மூளைகளென்று கூறத்தக்க தலைவர்கள் மொழித்துறையில் காட்டிய மனமாற்றத்தை இனத்துறையிலும் இனம் சார்பற்ற தேசியத் துறையிலும் காட்ட முற்பட்டால், திராவிட இயக்கத்தை இன வேறுபாட்டியக்கம் என்று கூறி அதைத் தம் முகம் பார்க்கும் கண்ணாடியாக்குபவர் அறியாச்செயல் முற்றிலும் பட்டழிந்து, ஓருலகில் ஓருலகம் கண்ட தமிழினம் இடம்பெறவும், ஓருலகம் விரைவில் அமையவும் விரைந்து வழி ஏற்படமுடியும்.

தமிழக பிராமணர் மட்டுமன்றி, தமிழக உலக இயக்கங்கள், பாரத இயக்கங்களில் தலைமை வகிப்பவர்களும் இனவேற்றுமையாற்ற வல்ல திராவிட இன இயக்கத்தை எதிர்த்துப்போகாத் தேசியம்வளர்ப்பதற்கு மாருக, இனவேறுபாடற்ற திராவிட இனத்தேசியத்தை வளர்க்க முற்படுவார்களாக! அது பிராமணருக்கே ஒரு புதுப் புகழும் புதுவாழ்வும் பாரத தேசியத்துக்கே ஒரு நல்ல வழிகாட்டியும் ஆகும். திராவிட தேசியத்துக்கு வழிவகுத்து அதன்பின் தானும் அவ்வழி யின்ருலன்றி, பாரததேசியம் ஓருலகு காணவல்ல நல்ல தேசியமாக, கீழ் திசையில் மறுமலர்ச்சி தூண்ட வல்ல தேசியக் கூட்டுறவாக இயங்க முடியாது.

இன வேற்றுமை இனவேறுபாடு இன வாழ்வு இவை மூன்றையும் இந்நாட்டு பொதுமக்களிடையே பலர் தெரிந்தோ தெரியாமலோ குழப்புகின்றனர். இனம் என்ற சொல்லின் பல தளத்திலுள்ள பொருள்களிலும் இது போன்ற குளறுபடி உண்டுபண்ணுகின்றனர்.

இன வேற்றுமை என்பதுஓரினத்துக்கு ஒரு நீதி, மற்ருேர் இனத்துக்கு மற்ருெரு நீதி-ஓரினத்துக்கு உரிமை, மற்ருேரினத்துக்குக் கடமை' என்ற அடிப்படையில் ஒருங்கு வாழும் தேசியம் அமைப்பதேயாகும். இன வேறுபாடு இதுவன்று. இனத்துக்கு இனம் பழக்க வழக்கங்கள். பண்பாடுகள் ஆகியவற்றில் வேறுபாடு இருக்கலாம். இருப்பது இயல்பு. இவற்றை வலிந்து ஒற்றுமைப்படுத்துவது அதாவது ஒருமைப்படுத்துவது என்பது உண்மையில் ஓரின ஆதிக்கமாகவும் இன வேற்றுமையாகவுமேமுடியும். எல்லா இனங்களும் சரிசம உரிமைபெற்று, அன்புப் பாசம், அறிவுடன் கூடிய விட்டுக்கொடுப்பு, ஒத்துழைப்பு ஆகியவற்றின் மூலம் வேறுபாட்டில் ஒற்றுமை வளர்ப்பதே இன வேறுபாடு ஆகும். இதுவே பல இனங்களாக வாழ்ந்த குழுக்களை இயற்கையின் சூழலில் ஒரே தேசிய இனமாக உருவாக்க உதவும். இவ்வாறு ஓரின அடிப்படையிலும் சரி, பல இன அடிப்படையிலும் சரி, வேறுபாட்டடிப்படையில் கூட்டமைப்பாக அமைபவையே பெரும்பாலான நாகரிக தேசிய இனங்கள். பண்பில் இவ்வாறு உருவாகாத இனக் கூட்டுக்கள் மதம், மொழி, வாழும் இடம் ஆகியவற்ருல் ஒரு திசைப்பட்டு ஓரினம்போலக் காட்சியளிக்கலாம், ஓரினம் என்று கூறப்படலாம். ஆனல் அவை தேசிய இனங்கள் ஆகமாட்டா.

ஐரோப்பாக் கண்டம் ஒரே நில இயல் பரப்பாகவும் கிட்டத் தட்ட ஒரே நாகரிகமும் ஒரே சமயமும் பழக்க வழக்கமும் உடையதாகவுமே நிலவுகிறது. ஆயினும் அது ஒரே தேசிய இனமல்ல, பல இனக் கூட்டாகக்கூட ஒருங்கு கூடி வாழ முடியவில்லை. அதுபோலவே இஸ்லாமிய உலகு ஆற்றல் வாய்ந்த ஒரு தனிப் பெருஞ் சமயத்தாலும் அதன் கட்டுப்பாட்டாலும் ஒன்றுபட்டிருந்தாலும்கூட, அராபியர், துருக்கியர், பாரசிகர், நீக்ரோக்கள், ஆரியர், திராவிடர் ஆகிய பலதர நாகரிகமுள்ள இனங்களை ஒரே இனமாகப் பொருத்திவிட முடியவில்லை. இவைகள் தனித்த தனி இனமாக வாழ முடியும். திராவிட இனப் பண்பாடு பின்பற்றியும் கூட்டினமாகக்கூட ஒரே தேசிய ஒரே இனமாக முடியாதென்றில்லை. ஆனல் கூட்டு வாழ்வுக்குரிய ஒரே அடிப்படை இன வேறுபாடும் சமத்துவமும் உடைய ஒத்துழைப்படிப்படையேயாகும். உயர்வு தாழ்வு அடிப்படையிலோ ஓரின ஒற்றுமை யடிப்படையிலோ அமையும் வலுக்கட்டாயமான ஒற்றுமை ஆதிக்க ஒற்றுமை கூட்டமைப்புக்கு உரியதன்று.

மேலை நாடுகள் நாகரிகத்தில் மேலோங்கியிருப்பதன் காரணம் அவை தனித்தனி இனங்களாகவோ, இன்றியமையா இடங்களில் சரிசம உரிமையுடைய நாட்டின் அமைப்புக்களாகவோ குடியாட்சிப் பண்புடன் இயங்குவதுதான். ஸ்விட்சர்லாந்து, அமெரிக்க ஐக்கிய நாடுகள், சோவியத்துருசியா ஆகிய கூட்டமைப்புக்கள் பல வேறுபடிகளில் இக் கூட்டமைப்பு முறையில் வெற்றிபெற்று வருகின்றன.

ஆனல் இவற்றில்கூட, மிகவும் வேறுபட்ட சில தனி இனங்களை முற்றிலும் கூட்டமைப்பில் எளிதில் இணைக்க முடியாமல் இந்நூல்கள் எழுகின்றன. அமெரிக்காவில் நீக்ரோப் பிரச்சினையும் ஆபிரிக்காவில் ஆசிய மக்கள் பிரச்சனையும் இத்தகையனவே. ஆபிக்காவில் நிக்ரோக்கள், மலாயாவில் மலாய் மக்கள் ஆகிய துரதிருட்டம் வாய்ந்தஇனங்களோ, ஏறத்தாழத் தமிழகத்தில் தமிழர், திராவிடத்தில் திராவிடர் நிலையிலேயே - திராவிட இயக்கம் போன்ற இனஉரிமை இயக்கம் கூட இல்லாத நிலையிலேயே உள்ளன.

ஆரியர் வரும்வரை திராவிட நாகரிகம் மேலோங்கி இருந்ததற்கான காரணம் திராவிடர் தனி இனவாழ்வு வாழ்ந்தது மட்டுமன்று. பிறஇனங்களுடன் கூடிவாழநேரும் சமயங்களில்கூட, திராவிடர் பின்பற்றிய பண்பு இன்றைய ஐரோப்பிய நாகரிகம் பின்பற்றும் பண்பாய் இருந்தது என்பதே. அவர்கள் இயல்பான குடியாட்சிப் பண்பு வளர்ந்த ஒற்றுமை நாடாமல், இன வேறுபாட்டடிப்படையில், சரிசம உரிமையுடன் அவ்வேற்றுமை, விட்டுக்கொடுத்து, பண்பொற்றுமை நாடி வந்தது. அவர்கள் ஒருமை நாடவில்லை. ஆனல் ஆரியர் வருகைக்குப்பின், ஆரிய திராவிட வேறுபாடு மட்டுமல்ல. ஆரியருக்குள்ளும் திராவிடருக்குள்ளும் நிலவிய, நிலவுகிற வேறுபாடுகள்கூட உயர்வு தாழ்வு வேறுபாடுகளாக, ஆதிக்க அடிப்படையில் ஆண்டான் அடிமை வேறுபாடுகளாகக் ஆக்கப்பட்டன. குடி வேறுபாடுகள் குல வேறுபாடுகளாக்கப்பட்டன. குல வேறுபாடுகள் சாதி வேறுபாடுகளாக சாதி வேறுபாடுகள் வருண வேறுபாடுகளாகப் படிப்படியாக வளர்ந்தன. மனித இனத்தில் இயல்பாக எங்கும் எழக்கூடும், நிலவக்கூடும் சிறு உயர்வு தாழ்வுகள் இயல்பாகவே மீண்டும் இயற்கையாற்றலாலேயேமாறுபடுபவைகள்தான். மற்ற நாடுகளில் அவ்வாறே கூறுகின்றன. ஆனல் திராவிடத்திலும் அது சூழ்ந்த நிலங்களிலும் இந்த இயல்பான சிறு உயர்வு தாழ்வுடன் செயற்கையான பெருத்த உயர்வு தாழ்வுகளாகவும், தற்காலிக உயர்வு தாழ்வுகள் நிலையான உயர்வு தாழ்வுகளாகவும், எளிதில் மாறக்கூடிய உயர்வு தாழ்வுகள் மாறமுடியாத, மாற்றமுடியாத, சமய சாத்திர கடவுளடிப்படையான மாறுபாடுகளாகவும் ஆக்கப்பட்டு வந்துள்ளன. திராவிட இயக்கம் கீழை உலகில் தோன்றும்வரை எந்த இயக்கத்தாலும் மதத்தாலும் - இஸ்லாத்தினுல்கூட - சாதிவேறுபாட்டை அகற்றவோ தளர்த்தவோ முடியவில்லை.. அது வளர்ந்துகொண்டேதான் வந்திருக்கிறது. திராவிட இயக்கம் பரவாத இடங்களில் இன்னும் வளர்ந்துகொண்டேதான் வருகிறது.

ஆரிய சமய, சமுதாய, பொருளாதார, சட்ட ஆதிக்கம் நீங்கிய ஒரு சுதந்தர திராவிட சமுதாயம், சமயம், அரசியல், பொருளாதார வாழ்வு அமையுமானல், அதில் திராவிடர் மட்டுமல்ல, ஆரியரும் மற்ற இனங்களும்கூட இன உயர்வு தாழ்வற்ற சரிசம அடிப்படையில், அன்பு ஒற்றுமையும் அறிவளர்ந்த கூட்டுமைப்பும் பெற்று மேம்பட முடியும் என்பதில் ஒரு சிறிது வரலாற்று நோக்கமுடையவர்க்கு ஐயம் ஏற்படாது. இந்திய மாநிலத்தில் கிழக்கைவிட மேற்கிலும், வடக்கைவிடத் தெற்கிலும் பிராமணரே முன்னேற்றமடைந்துள்ளதும், இதே போக்கில் மொழிகள் வளமடைந்துள்ளதும் இதனைத் தெளிவாகக் காட்டும்.

- தொடரும் -

விற்பனையாகிறது!

முல்லை

டிசம்பர் இதழ்

தமிழ்ப் பண்பு —பன்மொழிப்புலவர்
கதம்பம் —நா. பாண்டுரங்கன், எம். ஏ.
முன்னேற்றம் —க. அறிவழகன், எம். ஏ.
'என் பாட்டை நான் கேட்டேன்' —சந்திரபாபு
ஆட்டனத்தி-ஆதிமந்தி —கண்ணதாசன்

மற்றும் பல

விலை அணா எட்டு

முல்லை :: சென்னை-6.

கேள்விப் பெட்டி

பன்மொழிப்புலவர் பதில் தருகிறார்

ச. சண்முகன், கொடுமுடி.

“தெலுங்கிற்கு முதன் மொழி தமிழ்தான் வடமொழி அல்ல” என்பதற்குரிய காரணங்கள் யாவை? அதற்குரிய ஆதாரம், கிடைக்கக்கூடிய தெலுங்கு, ஆங்கில நூல்களைக் குறிப்பிடுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

கேள்வியே திருத்தப்பட வேண்டும். அறிஞர் தேவநேயப்பாவாணர், ஆசிரியர் மறை மலையடிகள் போன்றோர் தெலுங்கிற்கு முதன் மொழி தமிழ் என்று கூறுவதுண்டு, வற்புறுத்துவதுகூட உண்டு. ஆனால் அவர்கள் கூறும்போதும் அவர்கள் உள்ளம் அச்சமயம் ‘தமிழ்’ என்ற சொல்லைத் ‘தொல் பழங்காலத் தமிழ்’ என்றே கொள்ளமுடியும். ஏனென்றால் இன்றைய தெலுங்கு இன்றைய தமிழிலிருந்து ஒருக்காலும் தோன்றியிருக்கமுடியாது.

இன்றைய தேய்ந்த தமிழ் வேறு, பண்டைய வளமான தமிழ் வேறு என்பதை அறியாதவர்களல்ல அடிகளும் பாவாணரும். ஆனால் சொற்களின் அளவை வரையறுத்து வழங்கும் அறிஞர் மரபை அவர்கள் தமிழகத்தில் தோற்றுவித்து வருபவர்களையன்றி முற்றுவித்தவர்களல்ல. ‘தமிழ்’ என்ற சொல்லை இருவேறு ‘பொருளெல்லை’களுடன் தாம் வழங்குவதை அடிக்கடி அவர்களே கவனித்திருக்கமாட்டார்கள். இந்த இரண்டு எல்லையையும் வேறு பிரித்து உணர்த்திக் குழப்பம் தெளிவுபடுத்துவதற்கே பல மொழிகளை ஒப்பிட்டு நடுநிலை மெய்மை காண விரும்பும் ஒரு சார்புபற்றற்ற அறிஞர், இன்றைய தேய்ந்த தமிழுக்கே ‘தமிழ்’ என்ற பெயரை வைத்துக்கொண்டு, வளமாக வாழ்ந்த தொல் பழங்காலத் தமிழுக்குத் ‘திராவிடம்’ என்ற இனச் சொல்லையே பயன்படுத்துகின்றனர்.

திராவிடம் என்பது தொல் பழந்தமிழ் அதாவது தமிழின் மூலமுதல் வடிவம். தமிழுக்கு மட்டுமன்றி தெலுங்குக்கும் மலையாளத்துக்கும் கன்னடத்துக்கும் இது மூல முதல் வடிவம் என்பதில் ஐயமில்லை. ஆனால் தமிழர் இந்த மூல முதல் வடிவத்தைத் தொல் பழங் காலத் தமிழ் என்று கூற விரும்புவது போல, மலையாளிகள் அதைத் தொல்பழங் கால மலையாளம் என்றும், தெலுங்கர் அதைத் தொல் பழங்காலத் தெலுங்கு என்றும், கன்னடியர் அதைத் தொல் பழங் காலக் கன்னடம் என்றும் கூற விரும்புவது, இயல்பு. அது தவறுமாகாது. ஏனெனில் அத்தொல் பலங்கால இனத் தாய்மொழி முழுவதும் இன்றைய தமிழ் போன்றதுமன்று, இன்றைய மலையாளம் கன்னடம் தெலுங்கு போன்றதுமன்று. அதே சமயம் இவை அனைத்தின் சாயல்களும் அதில் உண்டு. இக்காரணத்தால் பற்றுதல் காரணமாக அல்லது தத்தம் ஆராய்ச்சிப் போக்குகளின் திசை காரணமாக, அம்மூல முதல் மொழியை யாரும் தொல்பழந் தமிழ் என்றோ, தொல் பழ மலையாளம், தொல் பழங் கன்னடம், தொல்பழந் தெலுங்கு என்றோ கூறுவது தவறல்லவானாலும், அது நுட்பமுடையதுமல்ல, யாவரும் மயங்காது தெளிவாக உணர்வதுமல்ல.

‘தெலுங்குக்கு முதல் மொழி தமிழ்தான்’ என்ற வாசகத்தில் ‘தமிழ்’ என்பது தொல்பழந் தமிழ் அல்லது திராவிடமானால், வாசகம் சரியான பொருளுடையது. இல்லாவிட்டால் திராவிட மொழிகளிடையே தமிழின் ஆதிக்கம் விரும்பும் தமிழனின் மயக்கம் தரும் புதிர் மொழியேயாகும்.

திராவிடக் கருத்துடன்தான் தமிழ் என்ற சொல் வாசகத்தில் வழங்கப்பட்டுள்ளது என்பதைக் கேள்வியின் பிற்பகுதி காட்டுகிறது. தெலுங்கிற்கு முதன் மொழி தமிழ் அதாவது திராவிடம்தான், வடமொழி அதாவது சமஸ்கிருதம் அல்லது ஆரியம் அல்ல. இது மொழி நூலார் அனைவரும் ஒப்ப முடிந்த முடிவேயாகும். பல்கலைக்கழகங்களில் மொழிகளை ஒப்பிட்டாராய்ந்த அறிஞருள் ஒருவர்கூடத் தெலுங்கோ, கன்னடமோ, மலையாளமோ சமஸ்கிருதத்தை அல்லது ஆரியத்தை மூலமாகவுடையது என்று கருதுவதில்லை.

இதே சமயம், இவ்வாறு கருதும் புலவர் நாட்டுத் தலைவர், மக்கள் ஆந்திர நாட்டிலும் பிற தென்னகப் பகுதிகளிலும் என்பதில் ஐயமில்லை.

தமிழகத்திலேயே சமஸ்கிருதப் பற்றுளர் பலர், சமஸ்கிருதப் பற்று வளர்க்கத் தமிழ் பயின்று தமிழ் வளர்ப்பதாகக் கூறிக் கொண்ட பலர் இதுபோலக் கூறியதுண்டு, தமிழ் சமஸ்கிருதத்திலிருந்து வந்த மொழி என்று! நன்னூலார் காலமுதல் இலக்கணக் கொத்து காலம் வரை இதை மெய்ப்பிக்க இலக்கணம் எழுதியவர் பலர். ஆனால் சமஸ்கிருதத்தைவிடத் தமிழில் புலமை வாய்ந்தது, உயர் இலக்கியமுடையது, சமஸ்கிருதத்தின் வேறான சமஸ்கிருதத்திலும் உயரிய பண்புடையது என்று கருதிய தாய்மொழி, மரபு (தனித் தமிழ் மரபு) மற்ற மொழி நாடுகளில் அழிக்கப்பட்டு அழிந்து, பட்டதுபோல, தமிழகத்தில் அழிந்தொழியாமல் பிரிட்டிஷ் ஆட்சிக் காலம்வரை, மறைமலையடிகள் காலம்வரை, மொழி நூலறிவுக் காலம்வரை தொடர்ந்திருந்தது. தமிழகத்தில் ஆரியர் மறைமலையடிகள் செய்த புரட்சிபோல மற்றத் தென்னக மொழிப் பகுதிகளில் அறிவுப் புரட்சி, மொழித் தேசியப் புரட்சி பரப்பத் தலைவர்கள் இல்லாது போன காரணத்தால், தற்கால ஆராய்ச்சி அறிவுமின்றி, மொழி ஒப்பிட்டறிவுமில்லாத புலவர், தலைவர், பொதுமக்களிடையே இன்னும் சமஸ்கிருதத்தையே தெலுங்கு முதலிய தென்னக மொழிகளின் மூல மொழியென்று சாதிக்கும் ஆராயா மடமை இருந்து வருகிறது.

சமஸ்கிருதம் உயர்ந்த சாதியினர்க்கும் உயர்ந்த இனத்துக்கும் ஆளும் வகுப்புக்கும் உரிய மொழி என்ற எண்ணம் இதை வளர்த்து வருகிறது என்பதில் ஐயமில்லை. ஏனெனில் தென்னக மொழிகளின் திராவிட அடிப்படையை மறுக்க முடியாத அறிவுத் தெளிவுள்ளவர்களும் உணர்ச்சி காரணமாக, தென்னக மொழிகளுக்குத் தமிழ் தாய், சமஸ்கிருதம் தந்தை என்றோ, திராவிடம் தாய், சமஸ்கிருதம் தந்தை என்றோ; அல்லது இருவர் இன மொழிகளின் கலப்பு என்றோ; திராவிடத்துவம், சமஸ்கிருதக்கட்டுமானம் என்றோ கூறி ஆறுதல் தேடுகின்றனர்.

ஆனால் ஆராய்ச்சித் துறையில் தொல்பழந் தமிழ் அல்லது திராவிடம் தென்னக மொழிகளைமட்டுமல்ல, வட இந்தியப் பண்படா மலைநாட்டு மொழிகளையும், அத்துடன் அமையாமல், இந்தி, வங்காளி மராத்தி, குசராத்திபோன்ற மொழிகளையும், சமஸ்கிருதத்தையும்கூடத் தோற்றுவித்த அடிப்படைத் தாய் இனமொழி என்று கூறியவர் மிக மிகப் பலர். ஆனால் அவர்கள் தொடக்க அடிப்படையும் இயற்கை இனப் பண்பும் திராவிடம், இடைக் கால வளர்ச்சிமட்டுமே ஆரியம் என்று கூறியமைக்கின்றனர்.

உண்மையில் இந்திய மொழிகளில் தென்னக மொழிகள் தூய திராவிடம், வடதிசை மொழிகளும் சமஸ்கிருதமும் திராவிட அடிப்படையில், பல வேறு அடிப்படையில் திராவிடக் கலப்புடையவை என்னலாம்.

தமிழ்ச் சொற்களும் தெலுங்குச் சொற்களும் பிற திராவிடச் சொற்களும் வட இந்தியத் தாய் மொழிகளில் மட்டுமல்ல, சமஸ்கிருதத்திலேயே ஏராளம் என்று மொழியாராய்ச்சியாளர் கண்டு வருகின்றனர். இன நடுநிலையுடன் காண்பவர்க்கு சமஸ்கிருதத்திலேயே 100-க்கு 80-க்குக் குறையாத மொழிகள் ஆரியர் மூல நாயகத்தில்லாத இந்தியச் செடி கொடி உயிரினப் பெயர்கள், இந்திய நாகரிகம், சமயம், அறிவு, கலைத்துறையார்ந்த சொற்கள் சமஸ்கிருதத்திலேயே திராவிடச் சொற்களாகவே இருப்பது எளிதில் தெரியவரும்—அவற்றுக்கு மேலை ஐரோப்பிய மொழிச் சொற்களுடன் தொடர்பு கிடையாது. நூற்றாண்டுகளுக்குமுன் ரஷ்ய நாட்டு மொழியும் இருந்த நிலையைவிட மூல ஆரிய மொழியும் நாகரிகமும் கட்டாயமாக மேம்பட்டதாயிருக்க முடியாது.

சமஸ்கிருதம் இந்தியாவில் ஆரியர் திராவிடருடனும் அவர்கள் நாகரிகத்துடனும் கலந்துகொண்ட பின் தமிழுடன் ஒப்பாகத் தம் தன் மதிப்பைக் காத்துக்கொள்ளும்படி தமக்கெனச் செயற்கையாக எழுத்து வடிவில் மட்டும் (பேச்சு வடிவில் என்றும் இல்லாமல்) அமைத்துக்கொண்ட இயந்திர மொழியேயாகும். அது தெலுங்குக்கல்ல, தென்னக மொழிகளுக்கல்ல—உலகில் எந்த மொழிக்கும் தாய் மொழியன்று. இன்றைய இந்தி, வங்காளி முதலிய வட இந்திய மொழிகளைவிட அது இலக்கியப் பழமை யுடையதேயன்றி, அவற்றின் தாய் மொழியோ மூல மொழியோ அல்ல. உண்மையில் அது மிகப் பழங் காலத்து வட இந்தியப் பண்படாத் தாய் மொழிகள் பலவற்றைத் தாய் ஆகவும் தமிழைத் தந்தையாகவும் கொண்ட ஒரு கொண்டு கூட்டு அவியல் மொழியேயாகும். ★

இந்த ஆண்டு

தென்றல்
பொங்கல் மலர்

★

இலக்கியப் புதையலாய்-இன்பச் சுரங்கமாய்
சித்திரச் சோலையாய்த் தயாராகிறது!

★

விலை ரூ. 2

டிசம்பர் 30-க்குள் முன்பணம் அனுப்பாதவர்களுக்குக்
கண்டிப்பாக மலர் அனுப்பப்படமாட்டாது.

நிலநூல் நோக்கி

கவர்னர் பிரகாசா அவர்கள்.

சென்னையில் பதவி வகித்த காலத்தில் குழந்தை உள்ளம் படைத்தவர் என்ற பட்டத்தைப் பெற்றவர். 'நிறையப் படித்தவர்-அதனால் நெஞ்சில பட்டதைக் கூறிவிடுகிறார்' - என்றும் சிலர் சொன்னார்கள். அவர் சென்னை கவர்னராக இருந்தபோது எல்லா வகையான கூட்டங்களிலும் கலந்துகொண்டிருக்கிறார். பேசியிருக்கிறார்; கூடியிருந்தவர்களையெல்லாம் சிரிக்கவைத்திருக்கிறார். அழகிகளுக்கும் துறவிகளுக்கும் இடையிலே நிலவும் உறவிலிருந்து, வெளிக்காட்டிக் கொள்ளக்கூடாத எதிர்க்கட்சியின் பலம் வரை அவர் வெளிப்படையாகப் பேசியிருக்கிறார். பிரகாசாவின் பேச்சுக் கேட்டு, எத்தனையோ காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் வருந்தப்பட்டிருக்கிறார்கள்.

மேலும், பிரகாசா அவர்கள் சென்னையிலிருந்த காலத்தில் பெரும்பாலும் திராவிட இயக்கத்தைப் பற்றியும் - சிறப்பாகத் தி.மு. கழகத்தைப் பற்றியுமே பேசியிருக்கிறார்.

'தென்னாடு - வடநாடு என்று பேசுபவர்கள் ஒரு சிலர்தான் என்று சொல்லுவது தவறு; அவர்கள் நாடு முழுதும் பரவி இருக்கிறார்கள்' - என்று அவர் ஒரு வரவேற்புக் கூட்டத்தில் குறிப்பிட்டது காங்கிரஸ் தலைமை பீடத்திற்கே ஒரு பலத்த சம்மட்டியடியாக அமைந்தது.

அவர் பம்பாய்க்குப் போன பிறகு, அதுபோன்ற உரைகளைக் கேட்கமுடியாதிருந்தது. ஆனால் சென்ற கிழமை சென்னைக்கு வந்த அவர் திராவிட இயக்கம் பற்றி ஒரு கூட்டத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

வடநாடு தென்னாட்டை அழுத்துகிறது என்ற குற்றச்சாட்டு இந்தியாவில் மட்டுமல்ல; உலகமெங்கும் இருக்கிறது. அதற்குக் காரணம், பள்ளிக்கூடங்களில் பூகோளப் பாடங்கள் சொல்லிக்கொடுக்கும் முறையில்தான் கோளாறு இருக்கிறது. தேசப்படத்தில் தலைப் பக்கம் வடக்கு என்று போதிக்கப்படுகிறது. அதனால் மேலே இருப்பவர்கள் கீழே இருப்பவர்களுக்குப் பாரமாக இருப்பதாக மாணவர்கள் புரிந்துகொள்கிறார்கள் போலும்! - என்று கேலியாகச் சொல்லியிருக்கிறார். இது கிண்டல்தான் என்றாலும் பதில் கூறமுடியாத பிரச்சினையில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் பொதுமக்களைச் சிரிக்க வைத்துத் தப்புவதுதான் அரசியலில் புத்திசாலித்தனம் என்று பிரகாசா கருதியிருப்பது தவறாகாது.

பிரகாசாவின் பேச்சில் இரண்டு உண்மைகள் தென்படுகின்றன.

உலகத்தில் எல்லா நாடுகளிலும் ஒரு பகுதி, வேறொரு பகுதியை அடக்க எண்ணுகிறது என்பது ஒன்று. மற்றொன்று, உலக நாடுகளின் புரட்சிக்குக் காரணமாக இருப்பது பூகோளம்தான் என்பதையும் பிரகாசா கண்டுபிடித்தது.

பிரகாசாவைப் போன்ற பெரிய மனிதர்களை நாம் கேட்டுக்கொள்வதெல்லாம், மற்ற மற்ற நாடுகளில் எழுந்துள்ள கொதிப்புக்கும் கொந்தளிப்புக்கும், இந்தியாவின் தென்பகுதியில் விடுதலைக் கிளர்ச்சி எழுந்திருப்பதற்கும் உள்ள வேறுபாட்டை அந்த பூகோளப் புத்தகத்தை வைத்துப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதேயாகும்.

தென்னாட்டுப் பிரிவினைக் குரலை ஒழிப்பதற்கு என்னென்னவோ காரணங்களைக் கூறி வந்தவர்கள், இப்போது உண்மையான பிரிவினைவாதிகளாக பூகோளம் என்ற நீதிமன்றம் செல்கின்றனர், ஆரம்பித்திருக்கிறார்கள்.

சரித்திரப் பின்னணியைக் கொண்டு கட்டப்படும் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள்தான் ஒரு அரசும் அதன் சட்டங்களும் நிலைபெற முடியும் என்பதைத்தான் நாம் இதுநாளும் கூறி வந்திருக்கிறோம் அந்த உண்மையைப் புரிந்துகொள்ளும் கட்டத்திற்கு வடநாட்டுத் தலைவர்கள் வந்திருப்பது நமது இலட்சியத்தின் உண்மையை - உறுதிப்பாட்டை உலகத்திற்கு எடுத்துரைப்பதாக அமைந்திருக்கிறது. மகிழ்ச்சி! உண்மை வெல்லட்டும்!

வெண்பாப் போட்டி-8.

"காய்" என்று எடுத்து "பழம்" என்று முடிக்கவும். அமைப்பு இப்படி :

காய்... — — —
— — — | — —
— — — —
— — பழம்.

['காய்' என்பது, காய்ந்து, காய்த்து என்பதுபோலவும் வரலாம்.]

முடிவு தேதி 14-12-57.

தென்றல் வெண்பாப் போட்டி : சென்னை - 6.

இலக்கியத்தில்......!

காதற் புலம்பல்!

"ஏ மாலைப்பொழுதே! நான் உனக்கு என்ன தீங்கு செய்துவிட்டேன்? காலைப்பொழுது உன்னைப்போல் வருத்தவில்லையே! அதற்கு மட்டும் நான் என்ன நன்மை செய்தேன்?"

"முன்னைப்போல் நீ இருக்கவில்லையே? முன்பெல்லாம் என்னைக் கண்டு நடுக்கத்துடன் வருவாய்! இப்பொழுது என்னை நடுங்கவைக்கும் பகையாகி வருகின்றாயே!"

"உண்மைதான். நீ முன்போல மகிழ்ச்சியாகக் காணப்படவில்லையே! உனக்கும் ஒரு காதலன் உண்டோ? அவன் உன்னைப் பிரிந்து சென்றானோ?"

"ஏ ஆயர்வாய்க் குழலே! உனக்கென்ன வந்துவிட்டது? என்னை இப்படி துன்புறுத்துகின்றாயே! எனக்குப் பகையாகிவிட்ட மாலைபொழுதின் தூதனோ நீ? உன் குரலில்கூட துன்பம் தானே ஒலிக்கிறது! உனக்கும் ஒரு காதலன் உண்டோ? அவன் உன்னைக் காக்கவைத்ததும் உண்டோ?"

"ஏ அன்றிற் பறவையே! அந்த பனைமரத்தில் இருந்துகொண்டு இப்படி ஆரவாரம் செய்வது ஏன்? எனது துன்பமறிந்து பங்குகொண்டு புலம்புகின்றாயோ? அந்த நல்லப் பண்பு உனக்குண்டோ? இல்லை, உனக்கும் ஏதாவது காதற்பிரிவு நேர்ந்ததோ?"

"ஏ கடலே! ஏனிப்படி அலறுகின்றாய்? எனது தனிமை உனக்குத் தெரிந்துவிட்டதோ? தனியே இருக்கும் என்னைத் துன்புறுத்துவது அழகோ?"

"அதோ! உனது காதலன் சந்திரன்கூட வந்துவிட்டானே! ஏன் இன்னும் உனது ஆரவாரம் அடங்கவில்லை? அவனது கரங்கள் உன்னைத் தழுவுவது போதாதோ? முகத்தை எட்டிப் பிடித்து முத்தமிட எண்ணுகின்றாயோ? அலைக்கரத்தை நீட்டி நீட்டி ஆரவாரிக்கின்றாயே!"

★

"ஏ உலகமே! நீ ஏன் இப்படி தூங்குகின்றாய்? யாமம் என்னும் கொடிய அரக்கன் வந்துவிட்டானே! களவுக் காலத்தில் எல்லாம் இந்தத் தூக்கம் எங்கே போயிருந்தது உனக்கு? நீ விழித்துக்கொண்டிருந்தபோது என்னை நெருங்க அஞ்சிய கடலும் யாமமும் தனிமையைக் கண்டு என்னைக் கொல்கின்றனவே!"

"ஏ அலர்வாய்ப் பெண்டிர்களே! தூங்குகிறீர்களா? தூங்குங்கள்! எனக்குச் சிறு ஆறுதல் கிடைக்கட்டும்."

"பொதுமகளிர்களே! தூங்குங்கள், கவலைப்படவில்லை!"

"ஏடி தோழி! என்னைக் கைவிட்டு நீயுமா இப்படிக் கவலையற்றுத் தூங்குவாய்!"

"ஏ கண்ணே! நீயேன் அழுகின்றாய்? அவரைக் காட்ட சொல்லி என்னைக் கொன்று தின்கின்றாயே! அவர் அருகாமையில் இருந்தபோது மகிழ்ச்சிப் பெருக்கால் மலர் போல அயர்ந்திருந்தாயே; அந்த மகிழ்ச்சி எங்கே போயிற்று? கண்டபோது இனியவைக் கூறி காணாதபோது தூற்றும் இழிநிலை உனக்கு வாய்த்ததா?"

"களவுக் காலத்து அவரைக் காண்பதற்கு அப்படித் துடித்தாயே! இன்று எரிகின்றதா அதன் பயன்? நீயும் துன்பப்பட்டாய்! என்னையும் துன்பத்திற்கு ஆளாக்கினாய்! இன்று அழுகின்றாய்! அழு! நன்றாக அழு! எனக்கது இனிது! நான் சிரிக்கின்றேன். அவரைப் பற்றக்கால் பிரிதல் அஞ்சி துயிலதிருக்கின்றாய்! பிரிந்தக்கால் பெறுதல் எண்ணித் துயிலாதிருக்கின்றாய்!"

"ஏ வளையல்களே! அவரது பிரிவை என்னைவிட முன்னால் உணர்ந்துகொண்டீர்களா? அவர் அருகாமை இருந்தபோது செறிந்து அழகாக இருந்தீர்களே! இப்பொழுது ஏன் கழன்று சிந்துகின்றீர்கள்? செல்வர் தம்மைச் சேர்ந்து உண்டுகளித்து, அவர் வறுமையுற்றபோது மறந்துவிடும் பண்பற்ற நண்பர்களாக மாறிவிட்டீர்களா?"

"ஏ நுதலே! ஏன் பசக்கின்றாய்? அவர் இருந்தபோது மட்டும் ஒளியோடு விளங்கினாயே! என்னை அலர் வாய்ப் பெண்டிர்கட்குக் காட்டித்தர போகின்றீர்களா? நட்பு பூண்டு மறைச்செய்திகளை அறிந்துகொண்டு, பின்னொருகால் பகைமை ஏற்பட்டபோது பிறர்க்கு அவர்தம் மறைதனை உரைக்கும் பெருமையில்லாத் தன்மை உமக்கு எப்போது வந்து சேர்ந்தது?"

"தோள்களே! மெலிகின்றீர்களா? மெலியுங்கள்!"

"நெஞ்சே! நீ மட்டும் என்னைக் கைவிட்டு விடாதே! இப்போது உன்னைவிட எனக்கு வேறு உயர்ந்த துணையில்லை!"

—மொழியன்பன்.

8. 'காய்' எனத் தொடங்கி 'பழம்' என முடித்தல்

காய்க்குங்கால் செம்மை கனிந்திடிலோ நற்கருப்பு
வாய்குதப்பித் தின்ன வெகுஇனிப்பு—நோய்தருங்காண்
கொட்டை மிகக்கடினம் கோடொன்று நீளவுண்டு
பட்டறிவால் சொல்லென் பழம்? ★

—ஆ. அரங்கசாமி, சேலம்.

❁

காய்ந்தும் சிலநோயைக் கண்டிக்க, வாகடத்தில்,
ஆய்ந்தே, எழுதிவைத்தார், ஆன்றோர்கள்—தீய்க்கும்,
சுரத்தினொடு, பித்தம், சுகமுறவே, என்றுந்
தரந்தகுதி ராட்சைப் பழம்.

—அ. மஞ்சினி, திண்டிவனம்.

❁

காய்கின்றார்; நம்மைக் கடிகின்றார்; நம்கொள்கை
ஆய்கின்றார் இல்லை, அரசாள்வோர்;—வாய் முனிந்தும்
இன்புற் றிருக்கின்றோம் ஏனென்றால் நம்கழகம்
பண்பில் பழுத்த பழம்.

—நா. காந்திமதி, பாளையங்கோட்டை.

❁

காய்ந்து பலநாட்கள் கஞ்சியின்றித் தான்பசியால்
ஓய்ந்து பலர்பாலும் ஊணிரக்கத்—தீங்குணத்தார்
அல்லை விலைகேட்க ஆழ்கடலிற் பாய்ந்தொழிந்தாள்
பண்பினுயர் பொய்யாப பழம்.

—ஆ. அரங்கனார், சேலம்.

❁

காய்ந்து வயிறொடுங்கிக் கையேந்திப் பட்டினியால்
சேயோ டலைந்தாள் தெருத் தெருவாய்—நாயாக்கி
ஓட்டி விரட்டினரே ஈயாமல் அந்நிலையில்
கேட்டமுதான் பிள்ளை பழம்.

—கு. பரிமளம், கமுதி.

❁

காய்நிலவே போதுமுன் காட்டாட்சி! துன்பத்தால்
தேய்பவரைத் தீய்க்கும்நீ தேய்ந்தேபோ!—நோய்திர்
நலனுவார் என்னத்தான் தாமில்லை; தீய்க்கும்
நிலவேநீ நச்சுப் பழம்!

—அரங்கநெடுமாறன், வல்லம்.

❁

காய்ச்சிப் பசும்பாலைக் கன்னற் சுவைகூட்டிப்
பிய்ச்சும் மலைத்தேனும் பின்சேர்த்துத்—தூய்மையுள
முக்கனியும் சேர்த்தும் முழுவதையும் மிஞ்சிவிடும்
மக்கள் மழலைப் பழம்.

—பே. சா. தனராசு, நாமக்கல்.

❁

காய்த்த மரக்கிளையின் காயல்ல! காங்கிரசைப்
பார்த்தினும் நாட புற் பரப்புதற்குச்—சீர்த்தவதன்
நோக்கம் விளைந்தபினும் நோவதேன்? இற்றுவிழப்
பார்க்கும் பழுத்த பழம்.

—ஆ. மயில்சாமி, வால்பாறை.

❁

காய்ந்துரைத்தல் அல்ல கனிந்தின்சொல் பேசுதிறன்
வாய்ந்திருத்தல் ஒன்றே மதிப்புடைத்தென்(று)—ஆய்ந்துண்மை
சொல்லிட்ட வள்ளுவனின் தொன்னூல் திருக்குறளோர்
பல்சுவையும் சேர்ந்த பழம்.

—கே. சீனுவாசன், செங்கற்பட்டு.

❁

காய்ந்து சருகானேன்! காதலியே! உன்முத்தம்
ஓய்ந்ததனால் என்னுதடும் காய்ந்ததுவே!—பாய்ந்துவந்து
என்பசி தீர்த்திடுவாய்! ஏந்திழையே! கொண்டுவா!
தின்னத் திராட்சைப் பழம்.

—பெ. இராசேந்திரன், மருதங்குடி.

❁

காய்சருகாய் வாடுகிறேன் கண்மணியே, உன்பிரிவால்;
சேய்மையிலேன் சென்றிதயம் வாட்டுகிறாய்?—ஆய்மயிலே!
உள்ளப்புண் ஆற்றிடவே ஓடிவந்து தந்திடுவாய்
கள்ளிதழ்க் கொவ்வைப் பழம்.

—அ. அய்யாசுவாமி, அண்ணாமலைநகர்.

❁

காய்த்தபுகழ் ஓங்குகின்ற கற்புவளர் பெண்ணினமே
வாய்த்தநும் இல்வாழ்வும் வண்டமிழ்ச்—சேய்வாழ்வும்
பண்பில் செழிக்கப் பகுத்துண்பீர் வள்ளுவப்
பண்பாளன் தந்த பழம்.

—'பரளித்தம்பி' நாமக்கல்.

❁

காய்எனவே நான்துவக்கி, காவியத்தை ஆக்குங்கால்
சேய்வந்து என்மடியில் சட்டென்று—சாய்ந்திட்டு
'தாய்'எங்கே! என்றிட்டு தூங்கா தழுததனால்
பாய்ந்தூட் டினேன்;மாம் பழம்.

—கி. ந. அருட்பிரகாசம், சிதம்பரம்.

❁

காய்ந்த தமிழகத்தைக் காத்தற்கு நம்பெரியார்
ஆய்ந்தெடுத்த 'பச்சை' அனைவரையும்—தீய்க்கும்!
அறிவழிக்கும் கூர்பசியே ஆயிடினும் உண்ணப்
பறிப்பரோ எட்டிப் பழம்.

—சி. சிவராமலிங்கம், சென்னை.

❁

காய்த்துக் குலுங்கும் கனிமூன்றுக் கொப்பாகச்
சேர்த்தல் சரியாமோ செந்தமிழை-பார்த்திடுவீர்
எண்ண இனிக்குமாம் இன்தமிழ்; உண்ணும்போ
தன்றோ இனிக்கும்முப் பழம்!

—கனிமொழியன், சென்னை-5.

❁

காய்ந்தார்; கணிகையர்தம் மார்பகத்தில் காதலரும்
சாய்ந்தார்; கனிவின்றிச் சாவென்றார்—ஆய்ந்தே
'வசந்தம்' எனவுரைத்தார் வாட்டுவதால் ஐயோ
கசந்ததுவே பாழும் பழம்.

—பொன். இலக்குமணதாசன், சென்னை-5.

❁

காயும், கனியும், கரும்பும், இளநீரும்.
வாயும், வயிறும், மகிழ்ந்திடவே—ஓய்வின்றி
உண்டாலும் உண்டோ! உயர்வாந் தமிழ்ச்சுவைநேர்
பண்டாய இன்பப் பழம்.

—நா. சிவராமமுத்துக்குமாரவேல், தேனி.

❁

காயும் சினத்தால் கடைத்தெருவில் நில்லாதாம்
காயமும் தப்பாதாங் கால்பட்டால்—நேயமுடன்
ஓம்பலும் ஆகாதாம் நஞ்சிருக்கும் பெற்றியதால்
பாம்பாகும் வாழைப் பழம்.

—து. பெருமாள், சென்னை 11.

❁

காயனையர் மாந்தர்களின் வேற்றுமையைத் தீராமல்
வாயளவில் ஏராளம் பேசிடுவார்—தாயகத்தின்
தன்மானம் காக்கத் தினையளவும் எண்ணாதார்
நன்மையிலா எட்டிப் பழம்.

—வி. துரைசாமி, சென்னை-23.

❁

காய்த்த விளைநெற் கதிர்போல் வணக்கமுடன்
பார்த்துத் தமிழரெலாம் பாராட்டும்—கீர்த்தியுள
மன்னவன் யாரென்ன, வாய்க்கும் மறுமொழியே
பன்னுமீ ரோட்டுப் பழம்.

—ஏ. எஸ். ராமச்சந்திரன், வால்பாறை.

❁

காய்கின்ற வெண்ணிலவு கண்துயிலப் போனாலும்
பாய்கின்ற தென்றலுக்குப் பாவியேன்—மாய்வேன்கொல்
வேரினிது விட்டு விளைகாதல் நல்லமரம்
பாரித்தல் உண்டோ பழம்?

—செல்வம், சென்னை.

★ விடை : ஈச்சம்பழம்

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணாசலம், ஏ.எல்.எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு